புதுமலர்: 15 ஆடி - ஆவணி இதழ்: 04

# அனல்

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -

01.07.2018



## தேவனைப் பின்பற்றும் வைராக்கியமும்;

## தேவ வைராக்கியமுள்ளவர்களின் ஆசீர்வாதமும்

சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

பக்கம்: 36 ஆண்டு: 2018 ஆசிரியர்: வே.மகாராஜா

# பொருளடக்கம்


01. அனலின் சத்தம்
02. அனலின் ஆன்மீக விருந்து
03. சிறுவர் வட்டம் - உன்னைப் படைத்தவர் தேவனே
04. வாலிபர் வளாகம் - எழுப்புதலுக்கான இதயக்கதறல்
05. தேவபணியாளர் பட்டறை
06. விடுதலையாகிற்றே
07. பெண்கள் பக்கம்
08. நற்செய்திப்பகுதி
09. அருட்பணியாளர் சரிதை - ஏமி கார்மிக்கேல், மேரி ஸ்லேசர்
10. குறுக்கெழுத்துப்போட்டி - 86
11. கதையும் கற்றதும்
12. சிரமம் ஏற்கலாம்
13. வினா விடை - 88
14. படித்ததில் பிடித்தது




## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய முகவரி:

சீயோன் ஜெபக்குழு,
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
347, Navalar Road,
Jaffna, Srilanka.

### மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ஆசிரியர் "அனல்",
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

The Editor "Anal",
347, Navalar Road,
Jaffna, Srilanka.



T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk

திக்கற்றவர்களாய்ப் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -




# அனலின் சத்தம்

கர்த்தருக்குள் பிரியமான அன்பு வாசக உள்ளங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள். ஆடி – ஆவணி மாதங்களுக்குரிய இச் சஞ்சிகையை வெளியிடக் கிருபை தந்த தேவனுக்கு நன்றிகள்.

கடந்து வந்த மாதங்கள் யாவும் தேவன் உங்களை அற்புதமாக நடத்தி வந்தார், பாதுகாத்தார்; இனியும் தாங்கி நடத்துவார். உண்மையுள்ளவர்கள் பரிபூரண ஆசீர்வாதங் களைப் பெற்றுக் கொள்வார்கள் என்பது கர்த்தருடைய வார்த்தை. யோசேப்பு தேவனுடைய பார்வையில் எப்போதும் சரியான நிலையிலேயே வாழ்ந்தார். அவருடைய வாழ்வின் உண்மைத் தன்மை ஒருபோதும் கெட்டுப்போக அவர் இடங்கொடுக்கவில்லை. சகோதரர்கள் அவரை விற்ற போதும் கூட தேவனுக்கேற்ற வாழ்க்கை முறையில் இருந்து மாறவில்லை. இதனாலேயே அந்நிய தேசத்தில் விற்கப்பட்ட போதும் கூட தேவன் அவரை உயர்த்தினார்.

அருமையான அனல் வாசகர்களே! எப்போதும் தேவனுக்கேற்ற வாழ்க்கை முறைக்கு நீங்களும் அழைக்கப் படுகிறீர்கள். அதுவே மேன்மையான வாழ்வாகும். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

– ஆசிரியர் –






போதகர் வேதநாயகம் மகாராஜா




ரூத் யூத வம்சத்தில் வந்த பெண் அல்ல. இவள் மோவாபிய ஸ்திரீ. மோவாப்பின் ஆரம்பம் அசிங்கமானது. மோவாப் சந்ததி எப்படி உருவாகியது என்றால்? லோத்துவிற்கும் அவனுடைய பிள்ளைகளுக்கும் ஏற்பட்ட தவறான உறவினால் பிறந்தவர்கள் தான் மோவாபும், அம்மோனும். அப்படியான ஒரு நிலையிலிருந்தாலும் அவளுடைய மனந்திரும்புதல், அவள் எப்படி தேவனுக்காக வைராக்கியம் காண்பித்தாள், விசுவாசம் வைத்தாள் என்பவற்றை வைத்து பார்க்கிற போது அவள் சூழ்நிலைகளைவிட தேவனை அறிகிற சரியான நல்ல அறிவைக் கொண்டிருந்தாள்.

**ரூத் 1:1 நியாயாதிபதிகள், நியாயம் விசாரித்துவரும் நாட்களில், தேசத்திலே பஞ்சம் உண்டாயிற்று; அப்பொழுது யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரானாகிய ஒரு மனுஷன் தன் மனைவியோடும் இரண்டு குமாரரோடுங்கூட மோவாப் தேசத்திலே போய்ச் சஞ்சரித்தான்.** அவர்கள் சஞ்சரித்த யூதா தேசத்திலே பஞ்சம் உண்டானது. பஞ்சத்தில் இருந்து தப்பிக் கொள்ளும்படியாக அவர்கள் மோவாப் தேசத்திற்கு சென்றார்கள். ஆனால் அங்கே சென்ற போது முதலாவதாக நகோமியின் கணவன் மரித்தான். அதன் பிற்பாடு நகோமியும் அவளது இரண்டு குமாரர்களும் அங்கே வசித்துக் கொண்டிருந்தார்கள். அவளது இரண்டு குமாரர்களுக்கும் திருமணம் செய்து வைத்தாள். ஓர்பாள், ரூத் என்னும் பெயர் கொண்ட இரு பெண்கள் அவர்களுக்கு மனைவிகளானார்கள். திருமணத்தின் பின் நகோமியின் இரு குமாரர்களும் அங்கேயே மரிக்கிறார்கள். பஞ்சத்தில் இருந்து தப்பிக் கொள்ளும் படியாகத் தான் நகோமியின் கணவன் தன் குடும்பத்தை அழைத்துக் கொண்டு மோவாப்பிற்கு சென்றான். பெத்லகேமில் தொடர்ந்து இருந்தால் பஞ்சத்தின் நிமித்தம் மரித்துப் போய்விடுவோம் என்று தான் மோவாப்பிற்கு சென்றார்கள்.

பெத்லகேம் என்றால் **"அப்பத்தின் வீடு"** என்று பொருள்படும். அவர்கள் எதிலிருந்து தங்களை காப்பாற்ற வேண்டும் என்று சென்றார்களோ அந்த வேதனை அவர்கள் சென்ற இடத்திலும் ஏற்பட்டது. அவளது கணவனும் இரண்டு குமாரர்களும் மோவாப்பிலே மரித்துப் போனார்கள். *நான் நினைக்கிறேன், நகோமி யோசித்திருப்பாள் நான் தனியாக இருந்தால் ஓரளவு சமாளிக்கலாம். ஆனால் கணவனை இழந்த இரண்டு பெண்களையும் வைத்துக் கொண்டு என்ன செய்வதென்று பாரப்பட்டிருப்பாள்.* அதிகமான வேதனை, அதன் மத்தியில் கர்த்தர் தம்முடைய ஜனங்களை பெத்லகேமில் சந்தித்து ஆகாரம் கொடுக்கிறார் என்ற செய்தி வருகிறது. இதை அறிந்த நகோமிக்கு மிகுந்த சந்தோஷம். என்னுடைய கருத்தின்படி துன்பங்களை, வேதனைகளைக் கண்டு நாம் ஓடுவதைவிட தேவனை நம்பி நிலையாக இருப்பது சிறந்தது.

தேவன் எங்களை தெரிந்து கொள்கிற போது அதற்குள் ஒரு பகுதி துன்பம் தான். தேவன் எங்களை அழைக்கிற போது அதற்குள் பெரும் பகுதி பாடுகள் தான். தேவன் எங்களை தெரிந்து கொள்கிற போது கிறிஸ்தவனுக்கு வரவிருப்பது நிந்தனை, அவமானங்கள் தான். எனவே நாங்கள் இவைகளைக் கண்டு தேவன் தந்த இரட்சிப்பை, தேவன் தந்த ஸ்தானங்களை, ஆசீர்வாதங்களை, மேன்மைகளைவிட்டு ஒரு போதும் நாம் ஓடக்கூடாது. எங்களுடைய வாழ்க்கையில் உறுதியான மனநிலையை எப்போதும் கர்த்தருக்குள் கொண்டிருக்க வேண்டும். வியாதியின் நேரத்தில், வறுமையின் நேரத்தில், பிரச்சினை, நிந்தனைகள் நிறைந்த நேரத்தில் நான் பெற்ற இரட்சிப்பை, நான் கண்டு கொண்ட ஆண்டவரை விட்டுவிடமாட்டேன் என்ற உறுதியான மனநிலை எமக்குள் இருக்க வேண்டும்.

நகோமியை பிழை சொல்ல முடியாது, ஏனென்றால் கணவன் வரும்படி அழைத்தால் அவள் மோவாப் சென்று தான் ஆக வேண்டும். இப்போது நகோமி தான் பெத்லகேமுக்கு திரும்பி

செல்ல வேண்டும் என்று முடிவெடுத்தாள். **ரூத் 1:8-9 (8.) நகோமி தன் இரண்டு மருமக்களையும் நோக்கி: நீங்கள் இருவரும் உங்கள்தாய் வீட்டுக்குத் திரும்பிப்போங்கள்; மரித்துப்போனவர்களுக்கும் எனக்கும் நீங்கள் தயை செய்ததுபோல, கர்த்தர் உங்களுக்கும் தயைசெய்வாராக. 9. கர்த்தர் உங்கள் இருவருக்கும் வாய்க்கும் புருஷனுடைய வீட்டிலே நீங்கள் சுகமாய் வாழ்ந்திருக்கச் செய்வாராக என்று சொல்லி, அவர்களை முத்தமிட்டாள். அப்பொழுது அவர்கள் சத்தமிட்டு அழுது, அவளைப் பார்த்து:** பின்பு அவள் தன்னுடைய விளக்கத்தை சொன்னாள். **ரூத் 1:14 அப்பொழுது அவர்கள் சத்தமிட்டு அதிகமாய் அழுதார்கள்; ஓர்பாள் தன் மாமியை முத்தமிட்டுப்போனாள்; ரூத்தோ அவளை விடாமல் பற்றிக்கொண்டாள்.** இழப்பின் பின்பும் பின்பற்றும் வைராக்கியம் மோவாபிய ஸ்திரீயாகிய ரூத்திற்குள் வருகிறது.

தேவனை அறியாத சந்ததியிலே பிறந்த ரூத் தேவனை அறிகிற சூழ்நிலை வருகிற போது, தேவனை அறிந்த நகோமியோடு உறவு வந்த போது அவளுடைய வாழ்வில் உறுதியான மாற்றம் ஏற்பட்டது. ஆகவே ஏற்பட்ட அந்த மாற்றம் ஆசீர்வாதத்தில் மட்டும் உறுதியாக இருக்கவில்லை. அது இழப்பு, துன்பம், வேதனை சூழ்ந்த போதும் அவளுக்குள் இருந்த வைராக்கியம் உறுதியாக இருந்தது. இந்த வைராக்கியம் எப்படி வந்தது.

## யாரும் சொல்லாமலேயே நாம் செய்ய வேண்டிய வைராக்கியம் இருக்க வேண்டும்

**ரூத் 1:16 அதற்கு ரூத்: நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப்போவதைக்குறித்து, என்னோடே பேசவேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்.** ரூத் தேவனை அறிகிற அறிவை பெற்றுக்கொண்ட பிற்பாடு தெரிந்துகொண்டாள்; நான் என் தேவனை விட்டுவிடக்கூடாது என்று. தேவனை தெரிந்து கொண்ட எனக்குள் அந்த மாற்றத்தை செயற்படுத்தினால் அடுத்த அடி எப்படி எடுத்து வைப்பது என்று சரியாக அவளுக்குத் தெரியாது. தன்னுடைய கணவன் இறந்து விட்டான், நான் பிற்பற்றிச் செல்லும் நகோமிக்கும் கணவன் இல்லை. எங்கே எப்படி நடுத்தெருவில் நிற்போமோ என்று தெரியாது. ஆனாலும் அவள் நகோமி மூலம் அறிந்து கொண்ட தேவன் தான் மெய்யான தேவன் என்பதை கண்டு கொண்டாள். பவுல் ஒரு சந்தர்ப்பத்தில் சொல்கிறார்: எங்களுடைய சுபாவமே எங்களுக்கு சில காரியங்களை கற்றுத் தரும் என்று. *உதாரணமாக கூறுகிற போது ஆண்கள் தலைமுடி நீழமாக வளர்ப்பது அழகல்ல, பெண்கள் ஆண்களை போல தலைமுடியை வெட்டுவது அழகல்ல என்று கூறி விட்டு, சுபாவமே அதை போதிக்கும் என்று சொல்கிறார்.* வாழ்க்கையின் நடைமுறைகளை யாரும் சொல்லித் தராமலே உங்களுக்கு தெரிகிறது. ஓர் *இடத்திற்கு சென்றால் எப்படி இருக்க வேண்டும் என்று*

உணர்வே எமக்குள் சொல்லும். *சில காரியங்களை நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதை எங்களை அறியாமலே நாங்கள் செய்வோம்.* அது எங்களோடு இணைந்தே இருக்கும். அதே போன்று இரட்சிக்கப்பட்டவர்களோடு கிறிஸ்துவுக் குரிய சுபாவங்கள் இணைந்தே இருக்க வேண்டும்.

கிறிஸ்தவ வாழ்வின் சில நடைமுறைகள் குறித்து சொல்லித் தரத்தேவையில்லை. அதே போன்று இரக்கம், மனதுருக்கம், தயவு, சாந்தம் இவ்வாறான காரியங்களெல்லாம் எம் மோடு கூடவே இருக்க வேண்டும். தேவன் உங்களை சந்தித்த விதங்கள் வித்தியாச மான முறைகளாய் இருக்கலாம். இயேசு தான் இரட்சகர் என்று அறிந்து கொண்ட முறைமைகள் சிலவேளை விதம்விதமாக இருக்கலாம். நீங்கள் எந்த விதத்தில் இயேசுவை அறிந்து கொண்டீர்களோ, இயேசுவுக்கு உங்கள் வாழ்வை கொடுத்தி ருந்தால், அவரையே நீங்கள் ஆராதிக் கிறவர்களாக இருந்தால் உங்களுக்குள் சில சுபாவங்கள், பழக்கவழக்கங்கள் தானாகவே வரவேண்டும். அதில் முக்கிய மான ஒன்று என்னவென்றால்; **நாங்கள் ஆராதிக்கிற, இரட்சிப்பை தந்த தேவன் தான் தேவன், அவரை நான் ஒரு போதும் விட்டுவிடமாட்டேன்** என்ற வைராக்கியம் இருக்க வேண்டும்.

இந் நாட்களில் ஆண்டவரின் அன்பை மறக்கிற ஏராளமான மக்கள் உண்டு. அதனுடைய காரணம் அற்ப காரியமாக இருக்கும். ரூத் மோவாபிய ஸ்திரீ. ஆனால் அவள் கண்டு கொண் டாள்; நகோமியின் தேவன் தான் தன்னுடைய தேவன் என்று. அது தான் உண்மையான வைராக்கியம். அவள் அப்பத்தின் வீடாகிய பெத்லகேமைக் குறித்து, யூதா ஜனங்களை குறித்து விசுவாசத்தோடு அவர்களுடன் உறவை ஏற்படுத்திக் கொண்டாள். இரட்சிக்கப் படுகிறவர்களுக்குள்ளே வருகிற பெரிய மாற்றத்தில் இதுவும் ஒரு முக்கியமான மாற்றம். இந்த உறவு முறையை ஒவ் வொரு கிறிஸ்தவனும் எப்போதும் கற்றுக் கொள்ள வேண்டும், கடைப்பிடிக்க வேண்டும். **தேவனுடைய ஜனமாய் நாம் மாறுகிற போது நாம் எல்லோரும் ஒரு உண்மையான ஐக்கியத்தோடு இருக்க வேண்டும்.** அந்த உறவின் தாற்பரியம் இந்த மோவாபிய ஸ்திரீக்கு தெரிந்திருந் தது.

**நாம் கிறிஸ்தவர்கள் என்றால் எம் ஆவியிலே இருக்கிற இணைவு ஒரு போதும் முறிக்கப்படக்கூடாது. விசுவாசி யோடு வைத்திருக்கிற உண்மையான பற்று ஒரு போதும் ஈடாட்டம் காணக் கூடாது. தேவனுடைய இரத்தத்தால் கழுவப்பட்டவர்களோடு கொண்டிருக்கிற உறவின் தன்மை உறுதி செய்யப்பட வேண்டும்.** அதைத்தான் ரூத் சொன் னாள்: உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம். தேவனுக்காக வைராக்கியம் பாராட்டியவர்களின் வாழ்க்கையின் நிறைவை பார்க்கிற போது அது பாடுகள் நிறைந்த முடிவாக இருந்தாலும் அதில் ஒரு நிறைவான மனசந்தோஷம் தான் இருக்கும். *ஸ்தேவானைப் பார்க்கிற போது அவனுடைய வாழ்வின் முடிவிலே ஒரு வேதனை வந்தது. அவன் கல்லெறிந்து கொல்லப்படும் போது வானத்தை அண்ணார்ந்து பார்த்து இயேசுவைக் கண்டான். ஸ்தேவானின் வாழ்வின் முடிவைப் பார்க்கிற போது அவர் உறுதியாக இருந்தார்.* நாங்கள் என்ன யோசிப் போம் என்றால், இழப்புக்கள், துன்பங்கள்

வந்தால் நாம் தேவன் மீது வைராக்கியம் கொள்ளத் தேவையில்லை, நாம் தேவனை விட்டுவிடலாம் என்று. ஆண்டவர் பல வேளைகளில் இழப்பை, துன்பத்தைத் தான் அனுமதிக்கிறார். ஏனென்றால் அவர் எங்களுடைய வைராக்கியத்தின் அளவை பார்க்க விரும்புகிறார். ஆபிரகாமின் மனநிலை தேவனுக்குத் தெரியும் என்றாலும் உன்னுடைய குமாரனை பலி செலுத்து என்று சொன்னார். ஆபிரகாம் அதை செய்வார் என்று தேவனுக்குத் தெரியும், ஆனாலும் அவருடைய செயலை எமக்கு காண்பிப்பதற்காக விரும்பினார்.

இந் நாளிலும் எங்களுடைய செயல், தேவனுக்காக வைராக்கியம் பாராட்டுகிற போது அதனால் தேவனுடைய நாமம் மகிமைப்படும். ரூத் சிறப்பான வைராக்கியத்தை காண்பித்தாள். அந்த வைராக்கியத்தின் மூலம் அவளுடைய வாழ்வில் படிப்படியாக ஆண்டவர் துன்பங்களை நீங்கச் செய்தார். பிற்பாடு அவள் பெத்லகேமுக்கு சென்று அங்கே வயல்களில் கதிர் பொறுக்குகிறாள். **துன்பம் உடனே அவளை விட்டு நீங்கிவிடவில்லை.** தேவனுடைய பிள்ளைகள் அனேகர் வேதனைப்படுவதற்குரிய காரியங்களில் ஒன்று உடனே துன்பம் நீங்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். நான் நடக்கவேண்டிய, கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் இருக்கிறது என்பதை அவள் தனக்குள் அறிந்திருந்தாள். இனி வரும் நாட்களில் நல்ல காரியங்களை யாரும் சொல்லாமலே செய்யுங்கள்.

*வீட்டிற்கு கணவர் வருகிற போது அவருக்கு குடிப்பதற்கு குளிர்மையாக கொடுக்க வேண்டுமா அல்லது சூடாக கொடுக்க வேண்டுமா என்பது மனைவிக்கு தெரிந்திருக்க வேண்டும். எத்தனையோ சிறப்பான காரியங்களை பிள்ளைகள் மறந்து போகிறார்கள். செய்ய வேண்டிய காரியங்களை செய்யாமல் விடுகிறார்கள். படிக்க வேண்டிய நேரத்தில் படிக்காமல்விடுகிறார்கள். இந்த காரியங்களை செய்யவேண்டும், ஆகாரத்தில் உப்பு அதிகரித்தால் மனைவியை மன்னிக்க வேண்டும் என்று கணவனுக்கு தெரியவேண்டும்.* தேவனுடைய அன்பை காண்பிக்கும் செயலை மற்றவர்கள் சொல்லித்தராமல் செய்ய வேண்டும். பசியோடு ஒருவர் வீட்டிற்கு வந்தால் அவருக்கு ஆகாரம் கொடுக்க வேண்டும் என்பது தெரிந்திருக்க வேண்டும். அதிலும் சில தவறானவர்கள் வருவார்கள், அதனையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். சிறப்பான நல்ல காரியங்களை செய்வதற்கு ஒரு போதும் பின் நிற்க வேண்டாம். நீங்களும் நானும் கேட்காத எத்தனையோ சிறப்பான காரியங்களை ஆண்டவர் எனக்கும் உங்களுக்கும் செய்திருக்கிறார். அவருடைய பிள்ளைகளாகிய நாம் ஏன் அவருடைய சுபாவத்தை பெற்றுக் கொள்ள முடியாது? பல நல்ல சிறப்பான செயலை யாரும் சொல்லாமலே செய்ய வேண்டும் என்ற உணர்வு எங்களுக்குள் இருக்க வேண்டும். **நீங்கள் பெற்ற இரட்சிப்பை விட்டுவிடாமல் இரட்சிப்பை தந்த தேவனை எப்போதும் பின்பற்ற வேண்டும். எதற்காகவும் ஆண்டவருடைய அன்பை விட்டுவிடவேண்டாம். எதற்காகவும் இயேசு கிறிஸ்துவை மறுதலிக்க வேண்டாம்.**

## மற்றவர்கள் சொல்லி நாம் செய்ய வேண்டிய வைராக்கியம்

**ரூத் 3:1 பின்பு அவள் மாமியாகிய நகோமி அவளை நோக்கி: என் மகளே, நீ சுகமாய் வாழ்ந் திருக்கும்படி நான் உனக்குச் சவுக்கியத்தைத் தேடாதிருப்பேனோ?** தயவு செய்து வாலிபர்களே உங்களுக்குரிய சவுக்கியத்தை நீங்களாக தேடாதீர்கள். யாரும் இதை தவறாக புரிந்து கொள்ள வேண்டாம். கர்த்தருக்கு தன்னுடைய பிள்ளைகள் ஒவ்வொருவரையும் குறித்து சரியான திட்டம், நோக்கம், எண்ணம் உண்டு. அதை ஆண்டவர் மறந்துபோய்விட்டார் என்று யாராவது நினைப்போம் என்றால் நாம் தேவனை குற்றப்படுத்துகிறோம். இந்த நகோமி சிறப்பான மாமி.

வேதத்திலே சிறப்பான குடும்ப வாழ்வு வாழ்ந்த ஈசாக்கின் வாழ்க்கைத் துணை தேவனாலே இணைக்கப்பட்டது. தேவனின் வழிநடத்துதலில் பெரியோரின் முயற்சி, செயலின் மூலம் வாழ்க்கைத் துணையை பெற்றுக்கொண்டார். பரிசுத்த வேதாகமத்தில் ஒரு நேர்மையான திருமண உறவில் நிலைத்திருந்த மனிதனாக ஈசாக்கு கருதப்படுகிறார். தன் தாய்க்காக துக்கமாய் இருந்த ஈசாக்கின் துக்கம் ரெபேக்காள் வந்த போது மாறியது. **ஆதியாகமம் 24**

ரூத்தின் உள்ளத்தின் வேதனை நகோமிக்கு தெரிந்திருக்கிறது. வேதனை புரிந்ததால் ரூத்தோடு நகோமியின் அணுகு முறையும் செயற்பாடும் சிறப்பாய் இருந்தது. என்னை நம்பி வந்த பிள்ளையை நான் விடமாட்டேன் என்று சொல்லி சிறப்பான முடிவுக்குள் கடந்து வருகிறாள். "அவள் சுகமாய் வாழ வேண்டும்" எப்படியான இருதயம் என்று பாருங்கள். இப்படியான இருதயம் எங்களுடைய இரத்த உறவுகளுக்கு மட்டுமல்ல, தேவனுடைய இரத்தத்தால் கழுவப்பட்ட ஒவ்வொருவரும் சுகமாய் வாழ வேண்டும் என்ற இருதயம் எம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்க வேண்டும். ஆணாக இருக்கலாம், பெண்ணாக இருக்கலாம். ஆனால் இந்த கட்டத்தில் அப்படிப்பட்ட சுபாவம் இருக்க வேண்டும்.

உண்மையில் வேதனையான காரியம், இந் நாட்களில் அருகி வருகிற காரியங்களில் ஒன்று; இன்னொருவர் சிறப்பாக இருக்க வேண்டும் என்று நாங்கள் எண்ணாமல் போவது. நாம் எல்லோரும் சிறப்பாக வாழ்ந்திருக்க வேண்டும் என்று இயேசு தன்னுடைய கடைசி துளி இரத்தம் வரை சிந்தி தன்னுடைய ஜீவனையே தந்தார். இந் நாளில் தேவனால் வாழ்ந்திருக்கும்படி அழைக்கப்பட்டவர்கள், தேவனால் சுகமாக்கப்பட்டவர்கள், பாவங்கள் மன்னிக்கப் பட்டவர்களாகிய எங்களுடைய மன நிலை எப்படி இருக்கிறது? எங்களுடைய மனச்சாட்சி எப்படி இருக்கிறது?

**முக்கியமாக வாழ்க்கைத் துணைகளை தேடுகிற போது நீங்களாக தேட வேண்டாம். உங்களுடைய பெற்றோர் அதை தேடுவார்கள், அல்லது உங்களுக்கு மேலாக இருப்பவர்கள் தேடுவார்கள்.** *உங்கள் வாழ்க்கைத் துணைகளை வழிகளின் சந்திகளில் நின்று தேடவேண்டாம். இன்னும் சிலர் தங்களது மோட்டார் சைக்கிள்களில் அலைந்து திரிந்து தேடுகிறார்கள். ஒரு வாலிபன் ஒரு பெண் பிள்ளையிடம் உங்களுடைய மோட்டார் சைக்கிள் (ஸ்கூட்டி) எத்தனை CC என்று கேட்டாராம். அதற்கு அந்த பெண்*

*பிள்ளை 90CC என்று சொன்னாராம். அப்பொழுது அந்த வாலிபன் சொன்னாராம் என்னுடைய மோட்டார் சைக்கிள் 250CC என்று. அதற்கு அந்த பெண் பிள்ளை சொன்னாராம் எவ்வளவு 250CC என்றாலும் அது 90CCக்கு பின் பதாகத்தான் வரும் என்றாராம்.* அப்படி யானால் அதன் அர்த்தம் என்ன? பெற்றோர் சொல்லாமல், பெரியவர் களின் அனுமதி இல்லாமல் நாங்களே எங்களுக்குரிய துணையை தேடி பின்னாலேயே செல்கிறோம்.

**"நான் பாவம் செய்தேன் என்று எப்போது உண்மையாக அறிக்கை செய்தீர்களோ அப்போதே அந்த பாவங்களை ஆண்டவர் மன்னித்து விட்டார்".** ஆனால் இரட்சிக்கப்பட்டிருக் கும் வாலிபர்களுக்கு தான் இந்த காரியத்தை சொல்கிறேன். தேவனுடைய இரத்தத்தால் கழுவப்பட்டிருக்கிற வாலிபர் கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இந்த விஷயத்தில் தேவன் சார்பில் வைராக்கியம் பாராட்ட வேண்டும். எங்களுடைய வாழ்க்கையில் வருகிற துன்பத்தின் மத்தியில் நாம் தேவன் மீது வைராக்கியமாக இருக்க வேண்டும். ஆண்டவரைவிடாமல் அவருக்குள் இருந்தோமென்றால் நாம் சரியான சத்தியத்தை புரிந்து எம்முடைய வாழ்க் கையை சரியாக காத்துக் கொள்வோம்.

**ரூத் 3:2 நீ போவாசின் வேலைக்காரிகளோடே கூடியிருந்தாயே, அவன் நம்முடைய உறவின்முறையான் அல்லவா? இதோ, அவன் இன்று இராத் திரி களத்திலே வாற்கோதுமை தூற்று வான்.** ரூத் வாழ்க்கை அடைய வேண்டும் என்பதற்காக நகோமி சில படிமுறை களை சொல்கிறாள். இது ரூத் தானாக திட்டமிடவில்லை. நகோமி தான் அதை சொல்கிறாள். இந்த போவாஸ் ஆண்ட வராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன் அடையாளமாக அடையாளப்படுத்தப் படுகிறார். இறுதியாக இந்த மோவாபிய ஸ்திரீ இயேசு கிறிஸ்துவுக்கு அடை யாளப்படுத்தப்படும் போவாஸின் மனை வியாக மாறுகிறாள். இங்கே ஒரு காரியத்தை கண்டு கொள்ள வேண்டும், மோவாபிய ஸ்திரீயாகிய ரூத்தின் தேவன் வேறு, அவள் ஆராதனை செய்தது வேறு, அவள் மனந்திரும்பி இஸ்ரவேலின் தேவனை ஏற்று வந்த போது அவளுடைய மணவாளனாக வந்தது இயேசுவிற்கு அடையாளமான போவாஸ்.

நீங்களும் நானும் பரம மண வாளனை கண்பதற்கு முதல் வேறு ஆராதனை செய்தோம். **இன்றைக்கு எங்களுடைய மணவாளன் யார் என்றால் அவர் தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து.** ஆண்டவர் எங்கள் மேல் வைத்த நோக்கத்தால் எங்கோ இருந்த எங்களையெல்லாம் ஒன்றாக்கி அவருடைய பிள்ளைகளாக மாற்றியிருக் கிறார். தேவனுடைய இரத்தத்தால் கழுவப்பட்ட நாம் அவருடைய சபையில் ஒன்றாக இருக்கிறோம் இதில் இருக்கிற சிறப்பு தான் மேலானது. உண்மையில் தேவன் மீது வைராக்கியம் இருக்குமென் றால் அந்த மணவாளனோடு இருக்கிற உறவு தொடரும். அது எந்த இழப்பிலும், குறைவிலும் முறியாமல் தொடரும். மணவாளனுடைய மணவாட்டி எப்போ தும் தூய்மையாக இருக்க வேண்டும்.

**பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தேவனை தரிசிக்க முடியாது** என்று வேதம் சொல்கிறது. உண்மையான வைராக்கியம் எங்களை மணவாளன் அண்டைக்கு கொண்டு வரும், அது எங்களை சுத்திகரிப்பதற்கு தூண்டும், எங்களுடைய சுபாவத்தை மாற்றும், சொல் கேட்கப் பண்ணும்.

இதுவரைக்கும் உங்கள் வைராக்கியம் யார் மீது இருந்தது? அல்லது எதன் மீது இருந்தது? எம்முடைய வைராக்கியம் இன்றைக்கு தேவன் மீது மாறட்டும். ரூத் தேவன் மீது வைராக்கியம் பாராட்டி னாள், அதனால் அவளுடைய வாழ்க்கை செழிப்பாக மாறியது. மோவாபிய சந்ததி தேவனுடைய ராச்சியத்திற்குள் உட்படலாகாது என்று வேதம் சொல்கிறது. ஆனால் கிறிஸ்துவை சுமந்து வந்த சந்ததியில் இந்த மோவாபிய ஸ்திரீ வந்தாள். தாவீதின் தந்தையின் தந்தையாகிய ஓபேத்தை ரூத் பெற்றாள். ஓபேத் – ஈசாய் – தாவீது. ஆதியாகமத்தில் தேவன் வாக்குப்பண்ணினார், அவர் உன் தலையை நசுக்குவார் என்று. ஆகவே கிறிஸ்து பிறப்பார் என்று அப்போதே வாக்குப்பண்ணப்பட்டுவிட்டது. அதன் பிற்பாடு கிறிஸ்து பிறப்பதற்கு ஒரு பரிசுத்தமான சந்ததியை ஆண்டவர் தெரிந்து கொண்டே வந்தார். அந்த தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததிக்குள் மோவாபிய ஸ்திரீயாகிய ரூத்தும் வந்துவிட்டாள்.

**சிலர் நீங்கள் செய்த கடந்த கால தவறை நினைத்து உங்களையே நீங்கள் நொந்து கொண்டிருக்கிறீர்கள். உங்களுடைய மனச்சாட்சியே உங்களை வேதனைப்படுத்துகிறது.** மோவாபிய ஸ்திரீக்கு பெரிய இடத்தைக் கொடுத்த ஆண்டவர் உங்களுக்கும் பெரிய ஆசீர்வாதத்தை தருவதற்கு வாஞ்சையாக இருக்கிறார். *நீ உன்னையே நொந்து கொண்டிருக்காதே, ஆண்டவர் உன் பாவங்களை மன்னித்திருக்கிறார். நீ சந்தோஷமாய் எழுந்து கர்த்தரை துதித்து, போற்றி அவருடைய வழியில் தொடர்ந்து நட, நிச்சயமாய் உன் வாழ்நாளில் கர்த்தர் பெரிய காரியத்தைச் செய்வார்.* நான் பாவம் செய்தேன் கர்த்தர் என்னை மன்னித்தார் என்ற நினைவு இருக்கத் தான் வேண்டும். ஆனால் அடிக்கடி அதையே நினைத்து நினைத்து உங்களை நீங்களே நொந்து கொண்டிருக்கிறீர்கள். இது சத்துருவினுடைய வேலை. உங்களுடைய உயர்வு, நீங்கள் ஆண்டவருக்காக வாழ வேண்டிய முறை எல்லாவற்றையும் இது மழுங்கடிக்கப் பண்ணிவிடும். ஆண்டவர் உங்களை மன்னித்திருக்கிறார். உங்களை ஆகாதவன் என்று யார் தள்ளினாலும் அவர் உங்களை நேசிக்கிறார்.

கர்த்தர் மீது வைராக்கியமாக இருங்கள், எந்த சூழ்நிலையிலும் ஆண்டவரை விட்டுவிடாதீர்கள். தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாய் யார் தூண்டினாலும் அந்த தூண்டல் பலிக்காமல் போவதாக. பெற்றுக் கொண்ட இரட்சிப்பிற்கு விரோதமாக சத்துரு கொண்டு வருகிற எல்லாவிதமான செயல்களையும் நீங்கள் மேற்கொள்ள வேண்டும்.

நீங்கள் அறிந்து விசுவாசித்து ஏற்றுக் கொண்ட இரட்சகர் இயேசுவுக்காக வைராக்கியமாய் வாழுங்கள்.

**"தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக"**



# உன்னைப் படைத்தவர் தேவனே!

☐ ஜசிந்தா அக்கா




றிச்சேட் சிறு பையன், அவருக்கு கார் என்றால் மிகவும் விருப்பம். தனது தகப்பனாரோடு காரிலே பாடசாலைக்குச் சென்று வருவான். இவ்வாறு செல்லும் போதெல்லாம் தனது தகப்பனார் காரை எப்படி ஓட்டுகிறார் என்று அவதானிப்பான். ஆனால் அமைதியாக இருக்கமாட்டான். காரைப் பற்றி அனேக கேள்விகள் கேட்ட வண்ணமாகவே இருப்பான். தகப்பனாரும் பதில் கொடுத்துக் கொண்டே இருப்பார். *"அப்பா எனக்கும் கார் ஓடக் கற்றுத் தாருங்கள்"* என்று கேட்பான். *"நீ சற்று வளர்ந்த பின் உனக்கு கற்றுத்தருவேன்"* என்று சொல்லி சிறிய கார்களை வாங்கி அவனுக்கு விளையாடக் கொடுத்தார் அப்பா. அவனும் அதோடு விளையாடுவான்.

**றிச்சேட் அழகான கார்களோடு விளையாடினாலும் ஆண்டவரை விட்டுவிடவில்லை. சிறுவதிலிருந்து கர்த்தருக்குப் பயப்படும் பயத்தில் வளர்க்கப்பட்டு வரும் அவன் தனது விருப்பம் எல்லாம் ஜெபத்திலே ஆண்டவருக்குச் சொல்லும் பழக்கமுடையவனான்.** நாட்கள் கடந்து சென்றது, ஒரு நாள் அப்பா றிச்சேட்டை அழைத்தார். *"காரை எப்படி ஓட்டுவது என்று கற்றுத் தரப்போகிறேன்"* என்று சொன்னார். அவனுக்கு இருந்த மகிழ்ச்சிக்கு அழவே இல்லை. காரை ஓட்டவும், பழுது பார்க்கவும் நேர்த்தியாக கற்றுக் கொண்டான்.

வாலிபனான றிச்சேட் தனது உயர்கல்வியை படித்து முடித்த பின் ஒரு ஸ்தாபனத்தின் உயர் அதிகாரியானான். அதிகாரியானவன் *"தான் சிறுவயதில் பலவிதமான கார்களை வைத்து விளையாடினேன், இனி அப்படியல்ல வீதியிலே*

*காரை ஓட்ட வேண்டும்"* என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான். அப்படியே காரை ஓட்டுவதற்கு அரசாங்கத்தில் அனுமதி பெற்றுக் கொண்டான்.

அனுமதி பெற்ற றிச்சேட் தனது தகப்பனுடைய உதவியோடு அழகான காரை வாங்கினான். காரைப் பார்த்து அளவில்லா மகிழ்ச்சியடைந்தான். தேவன் தனக்குச் செய்த நன்மைகள் ஒவ்வொன்றிற்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்தி தனது காரில் தேவாலயம் சென்று வந்தான். பின் தனது வேலை ஸ்தலத்திற்கு காரில் செல்லும் பழக்கமுடையவனானான். இப்படியே பல வருடங்கள் கழிந்தன.

ஒரு நாள் காலை வழமை போல் றிச்சேட் தனது காரில் வேலைக்குச் சென்று கொண்டிருந்தான். யாரும் இல்லாத தனிமையான இடத்தில் சென்று கொண்டிருக்கும் போது கார் நின்றுவிட்டது. அவன் காரால் இறங்கி கார் பொனட்டைத் திறந்து பழுது பார்த்தான். அந் நேரத்தில் அவ் வழியால் வயதான ஒருவர் இக் காரைக் கவனித்தவராகக் கடந்து சென்றார். சில மணி நேரத்திற்குள் வயதானவர் திரும்பி வரும் போது றிச்சேட் காரோடு போராடிக் கொண்டிருப்பதைக் கண்டு *"மகனே நான் உனக்கு உதவி செய்யட்டுமா"* என்று கேட்டார். றிச்சேட் வயதானவரை மேலும் கீழுமாகப் பார்த்து, சோர்ந்த மனநிலையோடு ஏதாவது செய்து பார்க்கட்டும் என்று *"சரி, ஐயா உங்களால் எதுவும் செய்ய முடியும் என்று நான் நினைக்கவில்லை, இது மிகவும் சிக்கலானது. வேண்டுமானால் முயற்சி செய்து பாருங்கள்"* என்றான்.

முதியவர் பொனட்டுக்குள் தலையைவிட்டு ஏதோ செய்தார். பின்பு காரை ஸ்டாட் செய்து பார்க்கச் சொன்னார். கார் நேர்த்தியாய் ஓட ஆரம்பித்தது. *"நன்றி ஐயா, றிச்சேட் அதிர்ச்சியுற்று ஐயா! நீங்கள் யார்? நெடுநேரமாக நான் முயன்று பார்த்தும் என்னால் அதைச் சரிப்படுத்த முடியவில்லையே. ஆனால் நீங்களோ சீக்கிரத்திலேயே பிழையைக் கண்டு பிடித்தது மட்டுமல்லாமல் அதைச் சரிப்படுத்தியும்விட்டீர்களே?"* என்றான். அதற்கு அந்த வயதானவர் *"நான் தான் இந்தக் காரைச் செய்தேன். இதில் எங்கு பிழை இருக்கிறது, எப்படித் திருத்த வேண்டும் என்று எனக்குத் தெரியும்"* என்று சொல்லி தன் நடையை ஆரம்பித்தார். காரைப் பழுது பார்க்க நேர்த்தியாய் கற்றுக்கொண்ட எனக்கு எனது காரைத் திருத்த முடியவில்லையே என்று றிச்சேட் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

பிரியமான பிள்ளைகளே, உங்கள் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை உங்கள் திறமைகளினாலோ, வசதிகளினாலோ தீர்த்துவிட முடியாது. இயேசு கிறிஸ்துவுடைய கரத்தில் ஒப்படையுங்கள். அவரே உங்கள் பிரச்சினைகளை சுலபமாகத் தீர்ப்பார். ஏன் தெரியுமா? அவரல்லவா உங்களை உண்டாக்கினவர்.

**என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது — யோவான் 15:5**




❑ போதகர் வேதநாயகம் சுமணன்




# ஜான் வெஸ்லி

## The life & Ministry of John Wesley



சத்தியத்தின் பேருண்மைகளை உலகிற்கு எடுத்து பறைசாற்றுகின்றவர்கள் இன்றும் ஆண்டவருக்குத் தேவை. காலத்தின் ஓட்டத்திலே பாதகன் பிடியில் சிக்கித் தவிப்போரை மீட்டு பரமனின் சித்தத்தை காண்பித்து நித்திய வழியிலே மக்கள் இனங்களை, தேசங்களை, குடும்பங்களை, தனிப்பட்ட நபர்களை, கிராமங்களை நடாத்தும் வாலிபர்களையே ஆண்டவர் தேடிக் கொண்டிருக்கிறார்.

ஆண்டவருக்காய் எழும்பிப் பிரகாசித்த ஓர் மெழுகுவர்த்தி தான் ஜான்வெஸ்லி. செயல் வடிவத்திலே முத்தாய் திகழ்ந்த இந்த தேவ பணியாளனின் வாழ்வு சரிதையை அறிவதன் மூலம் அனல் கொண்டு ஆண்டவருக்காய் பயன்பட வேண்டுகின்றேன்.

**ஜான்வெஸ்லியின் மனநிலை**
**1703 – 1791**

"ஓ ஏன் இந்த ஞானமும், பரிசுத்தமுமுள்ள மாபெரும் தேவன் பயனற்ற பாத்திரமாகிய என்னைப் பயன்படுத்த வேண்டும்! நீர் யாரை அனுப்பச் சித்தம் கொண்டீரோ அவனை அனுப்புகின்றீர். யாரிடம் கிருபையாய் இருக்கச் சித்தம் கொண்டீரோ அவனிடம் கிருபையாயிருப்பீர்! ஆமென்!
அப்படியானால் அது உம் சித்தப்படியே நடக்கட்டும்."

## ஜான்வெஸ்லி

ஜான் வெஸ்லி பதினெட்டாம் நூற்றாண்டின் தலைசிறந்த நற்செய்திப் பணியாளரில் ஒருவராவார். ஆயிரக் கணக்கான மக்கள் இவரது வாழ்வுச் சரிதையைப் படித்து பயன்பெற்றுள்ளனர். அவர் படைத்த நூல்களை மக்கள் இன்னமும் படித்துப் பயனடைகின்றனர். பலர் அவரை வெறுமனே மெதடிஸ்த சபையை உருவாக்கினவர் என்றே அறிந்துள்ளனர். ஆனால் அவருடைய ஆச்சரியமான குடும்ப பின்னணி மற்றும் காரியங்கள் பற்றி பலருக்குத் தெரியாது. நம் காலத்தில் வாழும் சிலர் மட்டும் வல்லமையான இந்த விசுவாச வீரனைப் பற்றி வேறு தகவல்களையும் அறிந்துள்ளனர். மாபெரும் ஆவிக்குரிய மனிதர்களைப் பற்றி அறிந்து கொள்வது நமது ஆவிக்குரிய வாழ்க்கைக்குப் பயனளிப்பதாகும்.

*"ஜான் வெஸ்லி அவர்கள் பதினெட்டாம் நூற்றாண்டின் மாபெரும் ஆற்றலாகத் திகழ்ந்தார்"* என்று சமீபத்தில் ஓர் அறிஞர் கூறியுள்ளார். அன்றைய ஆவிக்குரிய உலகில் ஓர் எரிநட்சத்திரம் போல் உதித்தார். ஆவிக்குரிய அனல் இல்லாத காலமாக அது இருந்துவந்தது. உண்மையான வேத உபதேசங்களை அன்றைய மக்கள் நம்ப மறுத்தனர். *"பதினெட்டாம் நூற்றாண்டின் கிறிஸ்தவ உபதேசமானது, அற்புதமானதாய் கருதப்படாமல் வெறும் பகுத்தறிவு மனிதாபிமானம் ஆகியவை பற்றிய கருத்துக்களாக எண்ணப்பட்டது."* இவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் வேதாகம தத்துவ பேராசிரியராவார். விசுவாசத்தை மக்கள் முற்றிலுமாய் மறந்துவிட்ட நிலையில் ஒரு விசுவாச புரட்சியாளனாக உதித்தார். காலம் எதிர்பார்த்திருந்த தேவையை பூர்த்தி செய்யக்கூடிய தேவ மனிதனாக ஜான் வெஸ்லி திகழ்ந்தார்.

அக் காலத்தில் இருந்த பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் களைவது மட்டுமன்றி, ஒழுக்கக்கேடுகளையும் சரி செய்ய வேண்டி இருந்தது. மத சம்பந்தமான போதனை

மட்டுமன்றி உணர்வு பூர்வமான சுவிசேஷத்தின் மேல் விசுவாசம் கொள்ளும்படி வலியுறுத்த வேண்டியது அவசியமாக காணப்பட்டது. அதன் மூலமாக மட்டுமே மனந்திரும்புதலை ஏற்படுத்துவது சாத்தியமாகும்.

மெதடிஸ்டு எழுப்புதலை திரைமறைவில் நின்று இயக்கும் புதிராக ஜான் வெஸ்லி திகழ்ந்தார். அவரைப் பற்றி பலர் பலவிதமான கோணங்களில் புரிந்து கொண்ட போதும் எவரும் அவருடைய பூரணமான தன்மையை அறியவில்லை என்று சார்லஸ் கீஸர் கூறியுள்ளார்.

வெஸ்லியின் வாழ்க்கையைக் குறித்து ஓரளவிற்கு நாம் பார்ப்போமெனினும் அது விறுவிறுப்பான சம்பவங்களாகும்.

## குடும்ப பின்னணி

ஜான் வெஸ்லி லிங்கன்ஷயரில் உள்ள எப்லொர்த் என்னுமிடத்தில் 1703ஆம் ஆண்டு ஜீன் மாதம் 17ஆம் திகதி சாமுவேல் – சூசன்னா தம்பதியரின் பதினைந்தாவது பிள்ளையாகப் பிறந்தார். உயிருடன் தப்பிய ஆண் பிள்ளைகளில் அவர் இரண்டாமவர் ஆவார். அவருடைய வலுவான ஆளத்தத்துவமானது அவருடைய குடும்ப பின்னணியால் உருவாக்கப்பட்டது.

அவருடைய தகப்பனார் முதலில் லிங்கன் ஷையரில் கிராமப் பாதிரியாராக இருந்தார். பின்பு வாக்குவாதங்களைக் கொண்ட சபைப்பிரிவுகளை விட்டுவிட்டு ஆங்கிலிக்கன் திருச்சபையுடன் இணைந்தார். ஆங்கிலிக்கன் சபையின் ஊழியரான பின்பு 1697ஆம் ஆண்டு முதல் 1735ஆம் ஆண்டில் மரணமடையும்வரையில் எப்வொர்த் என்னுமிடத்தில் உள்ள திருச்சபையின் கிராமப் போதகராக பணியாற்றினார்.

ஜான் வெஸ்லி ஒரு ஊழிய பாரம்பரியமுள்ள குடும்பத்தில் பிறந்தார். அவருடைய தகப்பனாரின் தாத்தா பியூரிட்டன் (பரிசுத்த நடக்கையை மிகவும் வலியுறுத்தும் சபைப்பிரிவு) போதகராக இருந்தார். அவர் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் மருத்துவமும் இறையியலும் துறையில் பயின்றவராவார். அரசாங்கம் பியூரிட்டன் ஊழியர்களுக்கு எதிராக செயற்பட்ட காலத்தில் அவருடைய கல்வி அவருக்கு உதவியாய் இருந்தது. ஜான் வெஸ்லியின் பாட்டனாரும் கூட வீரமும், நகைச்சுவை உணர்வும் கொண்ட அறிஞராகவும் எளிமையான சுவிசேஷ ஊழியராகவும் திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

புகழ்பெற்ற பியூரிட்டன் போதகரான ஜான் ஓவன் அவர்களின் ஆதரவாளராக அவர் திகழ்ந்தார். ஓவன் அவர்கள் ஜான் வெஸ்லியின் பாட்டனாரான ஜான் அவர்களை மிகவும் நேசித்து வந்தார் என்று காலமி என்பவர் கூறியுள்ளார். மேலும் அவர் ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்தில் படித்த போது பியூரிட்டன் இயக்கத்தினராகிய காட்வின், கார்னாக், ஹோவி, ஆல்னி, பிலிப், ஹென்றி ஆகியோரும் சக மாணவராக அவருடன் படித்து வந்தனர். அவர் ஜெப புத்தகத்திலுள்ள பிரார்த்தனைகளைப் பயன்படுத்தவில்லை என்று அவர் மேல்


1661இல் குற்றம் சுமத்தப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டின் விளைவாக அவரை ஊழியத்திலிருந்து நீக்கியதுடன் சிறையிலும் அடைத்தார்கள். அவர் தவறான முறையில் போதித்ததாக குற்றம் சுமத்தி அவருடைய போதக நியமனத்தையும் பறிக்கவும் முயன்றனர். அவரைக் காட்டிலும் அதிகமான பெயரும் புகழும் பெற்ற அவரது பேரனாகிய ஜான் வெஸ்லியும் கூட பதினெட்டாம் நூற்றாண்டில் இதேவிதமான குற்றச்சாட்டுக்களை சந்திக்க நேர்ந்தது.

ஜான் அவர்களின் தகப்பனார் சாமுவேல் அவர்களும் பிரிவினைவாதிகளின் மத்தியில் ஊழியம் செய்து வந்தார். சாமுவேல் வெஸ்லி 1662ஆம் ஆண்டில் பிறந்தார். தனது எட்டாவது வயதில் அவர் தன் தகப்பனாரை இழந்தார். இதனால் கல்வியிலும் உணர்விலும் அவர் அதிகமான மன உளைச்சலை அடைந்தார். வாலிபனாக அவர் தன்னை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்திய போது ஆங்கிலிக்கன் திருச்சபையின் பிளவினை எதிர்த்துப் போராடவேண்டியிருந்தது. அதிருப்தியாளர்கள் தவறிழைக்கின்றனர் என்பதை அறிந்து கொண்ட போது ஆங்கிலிக்கன் திருச்சபையின் தீவிர ஆதரவாளராக மாறினார். வாலிபத்தின் உணர்ச்சியினால் எடுக்கப்பட்ட தீர்மானமாக இது காணப்பட்ட போதிலும் அவருடைய முடிவுகளை மேற்கொள்ளும் திறமைக்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கிற்று. அவர் ஆங்கிலிக்கன் திருச்சபையுடன் இணைந்தது மட்டுமன்றி அதின் குருத்தவ அதிகாரங்களை தீவிரமாக ஆதரிப்பவராகவும் மாறினார். அவர் விட்டுவந்த அதிருப்தியாளர்கள் அவரை மீண்டும் தேடிவரவில்லை. எனவே ஆங்கிலிக்கன் சபைப்பிரிவின் அங்கத்தினர் என்னும் அடிப்படையில் அவருக்கு ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் இணைவதற்கான வாய்ப்பு கிட்டியது. ஒரு புறத்தில் அவர் பியூரிட்ன் திருச்சபையின் கொள்கைகளான: <u>மனந்திரும்புதல், பாவ அறிக்கை, மறுபடியும் பிறத்தல்</u> போன்றவற்றை வலியுறுத்திப் போதித்த போதிலும் மறுபுறத்தில் அவர் அறிவை வளர்த்துக் கொள்வதில் அதிக ஆர்வம் காட்டிவந்தார். சாமுவேல் வெஸ்லி எப்போதும் தன்னுடைய பாரம்பரிய உபதேங்களை விட்டுவிடவில்லை. இந்த இரண்டு காரியங்களும் தன்னுடைய பியூரிட்டன் குடும்ப பின்னணியால் இவருக்கு ஏற்பட்டன.

பலர் அவரிடம் எடுத்துக்கூறிய போதிலும் சுவிசேஷத்தை ஏற்பது போல் காட்டிக்கொள்ளவில்லை. ஆனால் உண்மை வேறுவிதமாயிருந்தது. தன் தகப்பனார் சுவிசேஷத்தை அறிந்து விசுவாசம் கொண்டிருந்தார் என்பதையும் சீர் திருத்தக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டார் என்பதையும் ஜான் வெஸ்லி குறிப்பிட்டுள்ளார்.

<u>"உள்ளான சாட்சியே கிறிஸ்தவத்தின் உறுதியான சாட்சியாகும்"</u> என்று சாமுவேல் தன் மரணத்தின் போது ஜான் வெஸ்லியிடம் கூறியுள்ளார்.

தொடரும்...



என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன். ஏசாயா 41:10




போதகர் வே.மகாராஜா

# ஊழியனின் இதயத்தூய்மை

மனிதனுடைய அவயவங்களுக்குள் மிக முக்கியமான பகுதி இருதயம். தேவனுடைய ஊழியத்தைச் செய்யும் ஒவ்வொருவரும் மிகவும் கருத்தாய் தம் இதயம் தனைத்தூய்மையாய்க் காத்துக் கொள்ள வேண்டும்.

மனித உடலில் இருதயமானது சகல உடற்பகுதிகளுடனும் தொடர்பு பட்டிருக்கின்றது. குருதியை உடற்பகுதி முழுமையும் அனுப்புகிறது. வேதாகமம் இருதயத்தைப் பற்றி அதிகமான போதனைகளை எமக்கு தருகின்றது. தேவன் எதிர்பார்க்கும் சுத்தம் மறைவானதில் இருந்து ஆரம்பிக்கின்றது என்பதை மனிதன் பூரணமாய் புரியும்வரை தூய்மையின் செயற்பாடு பாதிக்கப்படும்.

மனிதனை தேவன் நேரடியாக, முக்கியமாக கவனிக்கும் பகுதியாக இருதயமே இருக்கின்றது. **"மனிதனோ முகத்தைப் பார்க்கிறான், தேவன் இருதயத்தைப் பார்க்கிறார்"** என்கிறது பரிசுத்த வேதாகமம். எமது சிந்தனைகள், எண்ணங்கள், யோசனைகள் மற்றும் எமது மறைமுக செயற்பாடுகள் சம்பந்தப்பட்ட விடயங்கள் குறித்த கரிசனையின்மை மிக விபரீதமான ஆவிக்குரிய முடிவுகளுக்கு நேராக நடத்தும். **"இதனாலேயே எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள்; அதினிடத்தி லின்று ஜீவ ஊற்றுப்புறப்படும்"** என்கிறது **நீதிமொழிகள் 4:23.**

காக்கப்பட்ட இருதயம் நன்மைகள் புறப்படும் இடமாக மாறும் என்பது உறுதி. காக்கப்பட்ட இருதயம் மற்றவர்கள் ஆறுதலடையும்

செயற்பாடுகள், ஏனையவர்களை மகிழ்விக்கும்படியான தன்மைகள், ஆவிக்குரிய புத்துணர்வை ஏற்படுத்தும். ஆவியினால் நிறைந்த செயல்கள் நிறைந்ததாக காணப்படும். இருதயத்தைக் காத்துக் கொள்பவர்கள் தாங்களும் தூய்மையான வாழ்வு வாழ்ந்து மற்றவர்களும் வாழும்படியான ஆசீர்வாதங்களைக் கொடுக்கும் வாழ்வாக அமையும்.

முக்கியமாக கர்த்தருடைய பணிவிடை செய்யும் ஒவ்வொருவரும் தாம் கொண்டிருக்க வேண்டிய இருதய சுத்தத்தைக் குறித்துக் கருத்துள்ள வர்களாய் இருக்க வேண்டும். ஒரு ஊழியன் தேவனுக்கும் மனிதனுக்கும் நடுவில் நின்று செயலாற்றுபவன். தேவனோடு சரியான தொடர்பு கொள்வதற்கும் தூய்மை அவசியம். தேவனிடமிருந்து பெற்றுக் கொண்டதை மனிதனுக்குக் கொடுப்பதும் தூய்மையோடு கொடுக்கப்பட வேண்டியதே. **"பரிசுத்தமில்லாமல் தேவனை தரிசிக்க முடியாது"** அதே போல் பரிசுத்தமானவர் கொடுப்பதை பரிசுத்தத்தோடு பெற்று பரிசுத்தத்துடன் மக்களுக்கு கொடுப்பதே சிறப்பான ஊழியமாகும்.

இருதயத்தை தூய்மையாக காக்க வேண்டும் என்பதன் அவசியத்தை தாவீது ராஜா நன்கு அறிந்திருந்தார். இதனாலேயே **"தேவனே சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்தில் புதுப்பியும்"** என தேவனை நோக்கி கதறுகிறார். **"சுத்த இருதயத்தை என்னில் சிருஷ்டியும்"** என்பது தேவனுக்கு ஏற்ற ஒரு புதுவாழ்வுக்குள் செல்வதற்கான அவருடைய ஏக்கத்தை காட்டுகின்றது. தேவனே புதிய ஒரு செயலை எனக்குள் ஏற்படுத்திவிடும். என் இருதயம் கெட்டுப்போய்விட்டது, அதைப் புதிதாய் சிருஷ்டியும் என விண்ணப்பிக்கிறார்.

நேர்மையான / சரியான உள்ளான நிலை தான் எமது வெளியான வாழ்வைத் தீர்மானிக்கிறது. **"இயேசு கிறிஸ்து சொன்னார்: இருதயத்தின் நிறைவினால் வாய்பேசும்"** என்று. தாவீதின் இருதயம் சீரழிவதற்கு அவருடைய மனித ஆவியின் எண்ணத்துக்கு / ஒரு மனிதன் தன்னகத்தே கொண்டுள்ள இப்படித்தான் வாழவேண்டும் / இதைத்தான் செய்ய வேண்டும் அல்லது இது தவறு இது தவறில்லை என ஒரு மனிதனுக்கு சொல்லிக் கொடுக்கும் அந்த உள்ளான சரியான நிலையில் இருந்து விழுந்ததே காரணமாகும். மனிதனுக்குள் இருக்கும் மனித ஆவி தேவனுடைய நியமச் சட்டங்களை மீறுவதற்கு துணிகரங்கொள்ளக்கூடாது. ஏனெனில் தாவீது பட்சேபாளிடத்தில் பாவம் செய்து, அவளின் கணவனை தந்திரமாய்க் கொலை செய்த பின்பும் கிட்டத்தட்ட இரண்டு வருடங்களின்

பின்பு நாத்தான் தீர்க்கதரிசி அவருடைய பாவத்தை உணர்த்திய பின்பு தான் சொல்கிறார்: **"நிலைவரமான ஆவியை என்னுள்ளத்தில் புதுப்பியும்"** நிலைவரமான ஆவி *(Right Spirit within Me)* பரிசுத்த ஆவியானவர் தாவீதைவிட்டுச் செல்லவில்லை. ஏனெனில் **சங்கீதம் 51:11இல் "உமது சமூகத்தைவிட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்தில் இருந்து எடுத்துக் கொள்ளாமலும் இரும்"** என்கிறார். அப்படியானால் நிலைவரமான ஆவியை என்னுள்ளத்தில் புதுப்பியும் என்பது சரியான / நேர்மையான மனித ஆவியை நான் இழந்துவிட்டேன் என கருதமுடியும்.

தொடரும்...

**தேவ மனிதர் ஒருவர் மூன்று கேள்விகளை தன்னுடைய வீட்டின் கதவின் உட்புறம் எழுதி உள்ளார்.**

அக் கேள்விகளுக்கு உண்மையான பதிலை அவரால் கொடுக்க முடியாவிட்டால் அவர் வீட்டை விட்டு வெளியே செல்லமாட்டார். அக் கேள்விகளானவன:

**01. நான் எங்கு செல்கிறேன்?**

**02. நான் ஏன் செல்கிறேன்?**

**03. எப்போது நான் திரும்பி வருவேன்?**

நாம் ஒவ்வொருவரும் இக் கேள்விகளை நமது வீட்டின் கதவின் உட்புறம் எழுதி வைப்பது நல்லது.

அன்பின் அனல் வாசகர்களே!

இச் சஞ்சிகை மூலம் நீங்கள் பெற்றுக் கொண்ட நன்மைகளுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துகின்றோம். தொடர்ந்தும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களையும், கருத்துக்களையும் எமக்கு தெரியப்படுத்தமறவாதீர்கள்.

உங்கள் பிரதிகளை சிரமமின்றி பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக உங்கள் சந்தாக்களை புதுப்பித்துக் கொள்வதுடன், ஏனையோருக்கும் இதனை அறிமுகப்படுத்துங்கள்.

– ஆசிரியர் –




ரேமா



மெய்யான விடுதலைக்காக மனிதன் எத்தனையோ முறைகளைத் தேடி அலைந்து அலைந்து விடுதலையைக் காண முடியாமல் அதிகம் அதிகமாக அடிமைத்தனத்திற்குள்ளே சென்று கொண்டிருக்கிறான்.

**பயப்படாதிருங்கள்! இதோ எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார். அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங் களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்.**

**கிறிஸ்து இயேசுவினுடைய ஆவியின் பிரமாணம் பாவம், மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக் கிற்றே. மாம்ச சிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்.**

விடுதலைக்கான ஒரே வழி இயேசு கிறிஸ்து. கல்வாரியில் உனக்காக (நீ மரிக்க வேண்டிய இடத்திலே) பாவத்தை தீர்ப்பதற்காக பலியானார். மூன்றாம் நாள் உயிருடன் எழுந்து இன்றைக்கும் ஜீவிக்கிறார்.

இயேசுவே என் பாவங்களை மன்னியும், என்னைச் சுத்தம் செய்யும், உம் பிள்ளையாய் என்னை மாற்றும் என்று கேட்டால் நிச்சயம் அவர் உன்னை அணைத்து தீய பிரமாணங்கள், அடிமைத்தனங்களிலில் இருந்து விடுதலையாக்கி, சுபீட்சமான எதிர்காலத்தை தந்து உன்னை நடத்துவார்.



# அப்பொழுது அவன் மனைவி அவனைப் பார்த்து

❐ திருமதி. J.பிலிப்




எப்பொழுது? யார் யாரைப் பார்த்தது? என்று சிந்திக்கிற சகோதரியே! **திருமதி யோபு தன் கணவனைப் பார்த்தாள். இவளுடைய கணவனே** தேவனால் நற்சாட்சி பெற்றவன். **அவன் உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்கு பயந்து பொல்லாப் பிற்கு விலகுகிறவன் - யோபு 1:1.** *அகத்தின் அழகு முகத்தில் தெரியும்* என்ற வண்ணமாக மிக அழகான ஒரு மனிதனாக யோபு இருந்திருப்பான். அவனைப் போல பூமியில் ஒருவனும் இல்லை என்று **(யோபு 1:8)** வேதம் சொல்கிறது.

அது மட்டுமல்ல அவனுக்கு ஏழு குமாரர் களும் மூன்று குமாரத்திகளும், ஏழாயிரம் ஆடுகள், மூவாயிரம் ஒட்டகங்கள், ஐநூறு ஏர் மாடுகள், ஐநூறு கழுதைகள் மற்றும் திரளான பணிவிடைக்காரர்கள் இருந்தார்கள். அந்த மனிதன் கிழக்கத்தி புத்திரர் எல்லாரிலும் பெரியவனாயிருந்தான் **(யோபு 1:3).** அப்படிப்பட்ட ஒரு கணவனின் மனைவி என்று மிகவும் பெருமையுடன் வாழ்ந்திருப்பாள் யோபுவின் மனைவி.

இவ்வாறு இவர்கள் சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருக்கும் நாட்களில் சாத்தான் இக் குடும்பத் தின் மேல் கவனம் வைத்துவிட்டான். தேவனே இக் குடும்பத்தை சுற்றி வேலியடைந்து அவன் கையின் கிரியை ஆசீர் வதித்து அவனுடைய சம்பத்து அந்த தேசத்தில் பெருகியிருந்த தால் யோபின் மேல் கவனம் வைத்த சாத்தான் சும்மா விடு வானா? **யோபு 1:11-12 (11.) ஆனாலும் உம்முடைய கையை நீட்டி அவனுக்கு உண்டா னவையெல்லாம் தொடுவீரா னால், அப்பொழுது அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மைத் தூஷிக்கானோ பாரும் என்றான். 12. கர்த்தர் சாத்தானை நோக்கி: இதோ,**

**அவனுக்கு உண்டானவையெல்லாம் உன் கையிலிருக்கிறது; அவன் மேல் மாத்திரம் உன் கையை நீட்டாதே என்றார்; அப்பொழுது சாத்தான் கர்த்தருடைய சந்நிதியைவிட்டுப் புறப்பட்டுப்போனான்.** சாத்தான் யோபுவிற்கு உண்டான எல்லாவற்றையும் அழிக்கத் தொடங்கினான்.

ஒன்றன்பின் ஒன்றாக யோபுவிற்கு துக்கமான செய்திகளை கொடுத்துக் கொண்டிருந்தார்கள். **யோபு 1:13-14 (13.) பின்பு ஒரு நாள் யோபுடைய குமாரரும், அவன் குமாரத்திகளும், தங்கள் மூத்த சகோதரன் வீட்டிலே புசித்து, திராட்சரசம் குடிக்கிறபோது, 14. ஒரு ஆள் அவனிடத்தில் வந்து: எருதுகள் உழுகிற போது, கழுதைகள் அவைகளின் பக்கத்திலே மேய்ந்து கொண்டிருக்கையில்,** இறுதியில் அவனுடைய குமாரர்களும், குமாரத்திகளும் கூட இறந்துவிட்டார்கள் என்ற செய்தி கிடைத்தது. ஆனால் யோபுவோ! **கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்** என்றான். **இவையெல்லாவற்றிலும் யோபு பாவஞ்செய்யவுமில்லை, தேவனைப் பற்றிக் குறை சொல்லவுமில்லை. (யோபு 1:22)**

இவையெல்லாம் நடைபெறும் போது யோபுவின் மனைவி எங்கிருந்திருப்பாள்? அவளும் கூடக் கணவனுடன் இருந்து எல்லாச் செய்திகளையும் கேட்டுக் கொண்டிருப்பாள். உள்ளத்தில் துக்கம், தாங்க முடியாத வேதனையுடன் இருந்திருப்பாள். ஆனால் இப்போது சாத்தான் யோபுவின் மேல் தேவ உத்தரவுடன் கைபோட்டு, அவனுடைய உள்ளங்கால் தொடங்கி, அவன் உச்சந்தலை மட்டும் கொடிய பருக்களால் அவனை வாதித்தான். அவன் ஒரு ஓட்டை எடுத்து தன்னைச் சுரண்டிக் கொண்டு சாம்பலில் உட்கார்ந்தான். அப்பொழுது **அவன் மனைவி அவனைப் பார்த்தாள்.** ஐயோ என் கதை முடிந்தது, இனி நான் கணவனையும் இழக்கப் போகிறேன் என்று நினைத்திருப்பாள். துக்கம், துயரம் அவளை ஆட்கொண்டவுடன் உள்ளத்தில் அவளுக்கு தேவன் மேல் ஒரு கோபம் உண்டாயிற்று. ஆஸ்திகளையும், பிள்ளைகளையும் இழந்த போது கூட பொறுமையாயிருந்த யோபின் மனைவி, யோபு வியாதியால் பீடிக்கப்பட்ட போது பொறுமையை இழந்துவிட்டாள். தேவன் பேரில் அவள் வைத்திருந்த விசுவாசத்தில் ஆட்டம் கண்டாள். **ஆகவே தான் அவள் யோபுவைப் பார்த்து, நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ! தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள்.**

இன்று துன்பங்கள், தொல்லைகள் சூழும் போது அனேக சகோதரிகள் யோபின் மனைவியைப் போல தேவனைத் தூஷிக்க ஆரம்பித்து விடுவார்கள். தங்களுடைய சொற்களால், செய்காரியங்களால், சிந்தனையினால் தேவனைத் தூஷிக்க ஆரம்பித்து விடுவார்கள். **ஆனால் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட நானும் நீங்களும் ஒரு போதும், எச் சூழ்நிலை**

**யிலும் பொறுமையை, விசுவாசத்தை, சாந்தத்தை இழந்து போகக் கூடாது. தேவனை நாம் எம்மு டைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் போது தேவன் எம்மையும் எம்முடைய எல்லா வற்றையும் வேலியடைத்துள்ளார் என்பதை மறந்து போகாதிருங்கள்.**

துன்ப காலத்தில் கணவனுக்கு ஆதரவாக இருந்து, அவனைத் தேற்றி இருக்க வேண்டிய யோபுவின் மனைவி தன் கடமையிலிருந்து விலகிவிட்டாள். **ஆனால் நீயோ கணவனுக்கு ஏற்ற துணையாகவும், ஆறுதலாகவும் வாழமுற்படு. துன்பங்கள், தொல்லைகள் குடும்பத்தில் வரும் போது கணவனோடு சேர்ந்து ஜெபி.** இப்படிப்பட்ட சோதனைகள் நமக்கு நேரிடும் போது அவைகள் நம்மை ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேறச் செய்யும் என்பதை மறந்து போகவேண்டாம். யோபு இவைகள் எல்லாவற்றிலும் தன் உதடுகளினால் பாவஞ்செய்யவில்லை. ஆனால் யோபுவின் மனைவியோ **(யோபு 2:9)** அவனைப் பார்த்து, **நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனை விடும்** என்றாள். யோபுவின் மனைவியின் இருதயத்தில் கசப்பு வளர்ந்ததினால் தன் உதடுகளினால் தேவனை தூஷிக்கச் கணவனைத் தூண்டினாள். இதனால் தான் யோபு துக்கத்துடன் சொல்கிறார்: **(யோபு 19:17) என் சுவாசம் என் மனைவிக்கு வேறுபட்டிருக்கிறது** என்று.

சகோதரியே, இவ் வருடத்தில் ஆறு மாதங்களை கர்த்தரின் கிருபையால் கடந்து விட்டோம். ஆனால் நாம் சிந்திக்க வேண்டும்: கடந்த நாட்களில் நாம் எம்முடைய உதடுகளினால் செய்த பாவம் என்ன? **சங்கீதம் 141:3 கர்த்தாவே, என் வாய்க்குக்காவல் வையும்; என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்.** இவ்வாறு சொல்லி ஜெபிப்பாயா? அப்போது சோதனைகளை பொறுமையுட னும், அமைதியுடனும் ஏற்றுக் கொள்ள முடியும். யோபுவின் உத்தமத்தினால் யோபுவின் மனைவியும் பின் பல ஆசீர் வாதங்களைப் பெற்றுக் கொண் டாள். யோபுவின் முன் நிலமை யைப் பார்க்கிலும் பின் நில மையை கர்த்தர் ஆசீர்வதித்தார். நாம் நம்மை ஆராய்ந்து, நம்மை தேவனுக்கு ஒப்புக்கொடுப் போம். யோபுவின் குடும்பம் ஆசீர் வதிக்கப்பட்டது போல உன் குடும்பமும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**நீதிமொழிகள் 31:26**
**தன் வாயை ஞானம் விளங் கத் திறக்கிறாள்; தயையுள்ள போதகம் அவள் நாவின்மேல் இருக்கிறது.**





# ஆண்டவரையே அண்ணாந்து பார்க்க வைத்த குள்ள மனிதன்

A.ஆசீர்வாதம்




**லூக்கா 19:1-10 (1.) அவர் எரிகோவில் பிரவேசித்து, அதின் வழியாக நடந்துபோகையில், 2. ஆயக்காரருக்குத் தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்த சகேயு என்னப்பட்ட ஒரு மனுஷன், 3. இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான். அவன் குள்ளனானபடியால், ஜனக்கூட்டத்தில் அவரைக் காணக்கூடாமல், 4. அவர் போகும் வழியில் முன்னாக ஓடி, அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான். 5. இயேசு அந்த இடத்தில் வந்தபோது, அண்ணாந்துபார்த்து, அவனைக் கண்டு: சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்க வேண்டும் என்றார். 6. அவன் சீக்கிரமாய் இறங்கி, சந்தோஷத்தோடே அவரை அழைத்துக்கொண்டு போனான். 7. அதைக் கண்ட யாவரும்: இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார் என்று முறுமுறுத்தார்கள். 8. சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். 9. இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே. 10. இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்.**

இங்கே குறிப்பிடப்படும் மனிதன் சகேயு மிகவும் குள்ளமான ஒருவன். பெரும்பாலும் சரீர தோற்றத்தில் எல்லோரையுமே அண்ணாந்து பார்க்க வேண்டிய ஒருவனே தன் வாழ்நாளில் பலரை அண்ணாந்து பார்த்ததே அவனது வழமை.

பல வேளைகளில் நாம் கூட எமது வாழ்விலே ஒருவேளை சரீரப் பிரகாரமாக உயர்வாக இருக்கலாம். ஆனால் ஆசீர்வாதங்களில், நன்மைகளில், சுகத்தில், உயர்வுகளில், ஞானத்தில்

மற்றவர்களை அண்ணாந்து பார்க்கிறவர் களாவே இருக்கலாம். அல்லது தாழ்வான நிலையில் இருக்கலாம். என்னை யாருமே கணக்கெடுப்பதில்லை, நான் புறந்தள்ளப் பட்ட நிலையில் இருக்கிறேன், என்னில் எந்த மேன்மையும் இல்லையே..! எப்போ தும் எதற்கும் மற்றவர்களையே எதிர்பார்க் கின்ற ஒருவனாகவே உள்ளேனே என ஏக்கத்தோடே இருக்கும் ஒருவரா நீங்கள்?

இவை மட்டுமன்றி வியாதி, வேதனை, நெருக்கம், கஷ்ரம், துன்பங்கள், ஒடுக்கங்கள் என மாறி மாறி தொந்தரவு செய்கின்றதே! வைத்தியர்களை, உறவினர் களை, சமூக செல்வாக்குள்ளவர்களை, ஐசுவரியவான்களை, பெரியோரை என அண்ணாந்து அல்லது நோக்கி பார்ப்பது தான் எனது வழமையாக இருக்கிறதே என உங்களையே நொந்து கொள்ளும் ஒருவரா நீங்கள்?

சரி, தொடர்ந்தும் வாசியுங்கள் இந்த சூழ்நிலைகளை மாற்றி மற்றவர்கள் எம்மை வியக்கும் வகையில் அறிந்து, அண்ணாந்து பார்க்கும் அளவில் நம்மை உயரத்தில் கொண்டு வர ஒருவரால் முடியும். இந்த சகேயும் அப்படித்தான். ஆனால் அதற்காக அவன் சில காரியங் களைச் செய்ய வேண்டி இருந்தது. நாமும் அதனையே செய்வோம். அவன் செய்தது என்ன தெரியுமா?

## 01. இயேசு எப்படிப்பட்டவர் என அறிந்து கொள்ள விரும்பினான்

**"இயேசு எப்படிப்பட்டவர்" என அறிய ஒருமுறை உன் உள்ளத்தில் உண்மையாய் வாஞ்சித்தால் சரி.** பல பல நபர்களைக் குறித்தும், ஏராளமான காரியங் களைக் குறித்தும் அறிந்து கொள்ள துடிக்கும் உலகத்தில் **"ஒருமுறை இயேசு எப்படிப்பட்டவர்"** என்பதை அறிந்து கொள். இப்படி இப்படித்தான் அவர் இருப்பார் என ஒருவேளை உங்கள் உள்ளத்தில் தீர்மானித் திருக்கலாம். அல்லது இவ்வாறான ஒரு சில காரியங்களை அவரால் செய்ய முடியும் என நிச்சயித்திருக்கலாம். ஆனால் அவரை அறிய வேண்டிய பிரகாரமாய் அறிந்து கொண்டால் எம் வாழ்விலே ஏராளமான மாற்றங்களும் ஆசீர்வாதங்களும் உண்டாகும்.

**சகேயு தன் வாழ்விலே தனது தொழில்நுட்பங்களைக் குறித்தும், மனிதர் களைக் குறித்தும், உறவுகளைக் குறித்தும், சமூக அந்தஸ்துள்ளவர்களைக் குறித்தும் பல காரியங்களை அறிந்து கொள்ள முயற்சித்திருக்கலாம், அறிந்தும் இருக்க லாம். ஆனால் அந்த அறிவுக்கும் ஆண்ட வராகிய இயேசு கிறிஸ்துவை அறியும் அறிவுக்கும் இடையில் பெரிய வித்தியாசம். அவற்றினால் ஏற்படுகின்ற விளைவுகளும் மிகப் பெரிய வித்தியாசமே.**

## 02. தடைகளை மீறி அவரைப் பார்க்க சூழ்நிலையை அமைத்தான்

சகேயு ஓர் குள்ள மனிதன். மிகுந்த ஜனக்கூட்டத்தில் இயேசுவின் அருகே செல்ல அவனால் முடியவில்லை. தூர இருந்து பார்க்கும் அளவிற்கு அவனது சரீர தோற்றமும் இடம் கொடுக்கவில்லை. இருந்தும் தனது முயற்சியில் இருந்து அவன் பின்வாங்கவில்லை. என்ன செய்தான்? இயேசு போகும் பாதையை நிச்சயித்த அவன் முன்னாக ஓடி ஓர் கட்டத்தில் காட்

டத்தி மரத்தில் ஏறி, அதிலே நன்றாய் உட்கார்ந்து அவரைப் பார்க்கும் நேரத்தை ஆவலோடே கண்காணித்துக் கொண்டிருந்தான்.

இயேசுவை அறிந்து கொள்ள தேடி வரும் நண்பரே பல எதிர்சூழ்நிலைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி வரலாம். சமுதாயம், குடும்பம், உறவுகள், தோற்றம் ஓர் தடையாக இருக்கலாம். ஏளனங்கள், பரிகாசங்கள், நிந்தைகள், அவமானங்கள் என சுற்றி சூழ்ந்து இருக்கலாம்.

ஆனால் இவைகளுக்கு மத்தியில் எப்படியாவது அவரை சந்திக்க வேண்டும் என்று உறுதிகொள். தடைகளை மீறி அவரை காணவேண்டும் என உறுதியான தீர்மானத்தை சகேயுவைப் போல எடுத்துக் கொள்வீரா?

## 03. இயேசுவின் சத்தத்திற்கு கீழ்ப்படிந்து சீக்கிரமாய் இறங்கி கீழே வந்தான்

மரத்தினருகே வந்த இயேசு அவனது பெயரை சொல்லி அழைத்து நீ சீக்கிரமாய் இறங்கி வா என்றதும் சீக்கிரமாகவே இறங்கி வந்தான்.


இவனைப் போலவே நாம் இயேசு கிறிஸ்துவிடம் வந்து அவரை அறிய அறிய எமது பாவங்களைவிட்டும், தீய சுபாவங்களைவிட்டும் இறங்கி வரவேண்டி இருக்கும். சீக்கிரமாகவே இதனை செய்ய ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். காலத்தை இழுத்தடிக்கக் கூடாது. அவரது சத்தத்தைக் கேட்டு எம்மை தாழ்மைப்படுத்த வேண்டும்.

## 04. பாவங்களை அறிக்கை செய்து இல்லத்திலும் உள்ளத்திலும் இயேசுவுக்கு இடங்கொடுத்தான்

சகேயு தனது ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்கு கொடுப்பதாலும், தான் அநியாயமாய் யாரிடத்தில் எதையாகிலும் வாங்கினதுண்டானால் நாலத்தனையாய் திரும்ப செலுத்துகின்றேன் எனவும் இயேசுவுடன் கூட நடந்து போகையில் அறிக்கை செய்தான். அதுவே தான் அவனது வாழ்வில் ஒரு திருப்புமுனை.

எப்போது எல்லாவற்றைப் பார்க்கிலும் இயேசுவுக்கு முக்கியத்துவம் கொடுத்து, பாவ காரியங்களைவிட்டுவிட்டு எமது உள்ளத்திலும் இல்லத்திலும் இடங்கொடுக்கிறோமோ அன்றைக்கே விலையேறப் பெற்ற இரட்சிப்பும் அந்த இரட்சிப்பினால் உண்டாகும் அத்தனை ஆசீர்வாதங்களும் எமது வாழ்வின் பங்காக இருக்கும்.

இப்போது சகேயுவின் வாழ்க்கை உண்மையாகவே மற்றவர்கள் வியக்கும் அளவுக்கு உயர்ந்த மேன்மையான நிலைக்கு மாறிவிட்டது. இதனைப் போலவே இக்காரியங்களை நீங்களும் செய்தால் பலர் உங்களை அண்ணாந்து பார்க்கும் அதாவது உயர்ந்த மேன்மையான நிலைக்கும் வந்துவிடும். இன்றே உன் உள்ளத்தில் அவருக்கு இடங்கொடுக்க தீர்மானி.








## ஏமி கார்மிக்கேல்

## 1867 - 1951

### சேவை செய்ய புறப்படுங்கள்

1912ஆம் ஆண்டு. ஓர் மாலை நேரம், சூரியன் தன் கண்களை மூடிக்கொண்டிருந்த வேளை. ஏமி கார்மிக்கேலின் கண்கள் தெளிவாக திறந்து கொண்டிருந்தன. காதுகள் அத்தொனியைக் கூர்மையாகக் கேட்டுக் கொண்டிருந்தன.

"ஊழியத்திற்குப் புறப்பட்டுப் போ" இதுவே அந்த சத்தம். உடனே இறைவன் பாதம் தன்னை ஒப்புக் கொடுத்தார். ஜப்பான் நாட்டை நோக்கி தன் பயணத்தைத் தொடர்ந்தார். 15 மாதங்கள் ஊழியத்தை முடித்து இலங்கைக்குச் சென்று பணியாற்றினார்.

அக் காலத்தில், இந்தியாவில் தேவதாசி முறைகள் பின்பற்றப்பட்டு, சமுதாயம் சீரழிந்து கொண்டிருந்தது. இம் மக்களை மீட்கவோ, ஆதரவு கொடுக்கவோ யாரும் முன்வராத வேளை, ஏமி கார்மிக்கேல் 1895ஆம் ஆண்டு இந்தியாவை நோக்கி, இச் சீரழிவைத் தடுக்க சீற்றத்துடன் புறப்பட்டார்.

சிறுமிகள் மற்றும் பெண்களைப் போன்று சிறுவர்களும் ஆலயங்களுக்குப் படைக்கப்பட்டு, நாடகக் கம்பெனிகளுக்கு விலைக்கு விற்கப்பட்டனர். இத்தகைய ஒழுக்கமற்ற வாழ்வை தடுக்க 1926ஆம் ஆண்டு "டோனாவூர் ஐக்கியத்தை" நிறுவினார் ஏமி கார்மிக்கேல். திக்கற்றவர்கள், விதவைகள், துன்பப்படுவோர், ஒழுக்கங்கெட்டவர்கள், ஆதரவற்றோர் போன்றவர்களுக்கு புகலிடம் தந்து, அவர்களுக்குக் கிறிஸ்துவின் அன்பைச் செயல் வடிவத்தில் காட்டினார். இந்த அமைப்பை "நட்சத்திரக் கூட்டம்" என்றும் அழைத்தார்.

இன்றும் டோனாவூர் ஐக்கியம் ஆயரத்திற்கும் மேற்பட்டோருக்கு வாழ்வளித்து வருகின்றது. செம்புலிங்கம் என்ற மாபெரும் கொள்ளையனும் இவரால் மனந்திரும்பினான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

56 வருடங்களாக இந்தியாவின் நசுக்கப்பட்டவர்களுக்காகவே சேவை செய்த இவர், 38 நூல்களை எழுதியுள்ளார். அவைகளில் பல நூல்கள் தம் வாழ்நாளில் எலும்புமுறிவினால் 20 ஆண்டுகள் தாம் படுத்த படுக்கையாக இருக்கும் பொழுது எழுதியவையே. "ஏழைகள் என்னுடையவர்கள்" என்ற வாக்கின்படி வாழ்ந்த இவ்வம்மையார் 1951ஆம் வருடம் ஜனவரி 18 அன்று விண்ணகம் சென்றார்.

**அன்பரே! சமுதாயத்தில் நசுக்கப்படுகிற மக்களுக்காக உமது சேவை என்ன?**

வாழ்விலிருந்து வாழ்வுக்கு: அன்புகூராமல் கொடுக்க முடியும், அனால் கொடுக்காமல் அன்புகூர முடியாது – ஏமி கார்மிக்கேல்

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜனவரி 18**



## மேரி ஸ்லேசர்

## 1848 - 1915

### அறியாமை அகலட்டும்

ஆப்பிரிக்கா தேசம், டேவிட் லிவிங்ஸ்டன் என்ற மாபெரும் மிஷனெரியை இழந்து தவித்த சமயம். ஆப்பிரிக்காவிற்கு செல்லவோ ஆட்கள் இல்லை. அர்ப்பணம் செய்தார் மேரி ஸ்லேசர்.

கலபார் நதி, இன்றைய நைஜீரியா, மனிதர்கள் மனிதர்களாகவே இல்லை. வாழ்க்கைக்கான சட்டம் இல்லை. வாழ்க்கை முறையும் இல்லை. மூடப் பழக்க வழக்கங்கள் மலிந்து கிடந்தன.

அந்தோ பரிதாபம்! இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்தாள் ஓர் தாய். குழந்தைகளின் உடல் ஈரம் காய்வதற்கு முன்னே, கொடூரன் ஒருவனின் கை, மூர்க்கமாய் பாய்ந்தது. மெல்லிய வாய் திறந்து குழந்தைகள் அழும் முன்னே, அவைகளின் தலைகளைத் துண்டித்து எறிந்தான். சோகத்தின் மேல் சோகம் மீண்டும் தொடர்ந்தது. அழுவதற்குக் கூட கண்ணீரற்ற அத்தாய் வீட்டை விட்டுக் காட்டிற்கு விரட்டப்பட்டாள். தனிமையில் அவள் வேதனைப்பட்டாள்.

காரணம்...? இரட்டைக் குழந்தைகள் பிறந்தால் அவை தீய சக்திகள் மூலம் பிறந்தவை என்பது அவர்களின் நம்பிக்கை. என்ன அறியாமை இது?

மேரியின் கண்கள் சிவந்தன. யுத்த வீரனைப் போல உள்ளத்தில் வீறு கொண்டு எழுந்தாள். கிறிஸ்துவின் அன்பு அவரை உந்தி தள்ளியது. வீடு வீடாய்ச் சென்று உண்மைச் செய்தியை உற்சாகமாய் உரைத்தாள். மக்களின் அறிவுக் கண்களைத் திறந்தாள். இரட்டைக் குழந்தைகளைக் காப்பாற்றினாள்.

ஆப்பிரிக்காவின் வெள்ளை ராணி "மா" என்று அன்புடன் அழைக்கப்படும் மேரி ஸ்லேசர் 13 ஜனவரி 1915ஆம் ஆண்டு தான் காப்பாற்றிய இரட்டைக் குழந்தைகள் சூழ்ந்திருக்க இறைவன் பாதம் சரணடைந்தார்.

**அன்பரே! அறியாமை என்னும் இருளை அகற்ற, முன்வருவீர்களா?**


**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: நான் அங்கு போய் அதை நிறுத்தாவிடில் அங்கே அதிக இரத்தம் சிந்தப்பட்டு அநேகர் கொல்லப்படக்கூடும் — மேரி ஸ்லேசர்**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜனவரி 13**

---

## குறுக்கெழுத்துப் போட்டி - 85

சரியான பதில்கள்



**இடமிருந்து வலமாக**

03. அப்சலோம் (11சாமு 14:25)
08. தெலாயா (நெகேமியா 6:10)
10. சம்முவா (எண்ணாகமம் 13:4)
11. யெரொபெயாம் (1இராஜா 13:34)
15. மல்கியா (மல்கியா 3:16)

**வலமிருந்து இடமாக**

02. தெர்த்துல்லு (அப் 24:1)
05. யோயாக்கீனை (11இரா 25:29)
07. நீதிமான் (நீதி 14:32)
09. எஸ்றா (எஸ் 9:15)

**மேலிருந்து கீழாக**


01. எக்லோன் (நியாயா 3:17)
04. ஓபேலின் மதிலின் (11நாளா 27:3)
05. யோவேல் (1நாளா 6:33)
06. எலியாப் (குழ்பியுள்ளது) 1சாமு 17:28

**கீழிருந்து மேலாக**

11. யெப்தா (நியாயா 11:31)
12. பெல்ஷாத்சார் (தானி 5:6)
13. ஜீவன் (உபா 28:66)
14. மெனே (தானி 5:26)

# குறுக்கெழுத்துப் போட்டி - 86

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | 02 | 03 |
| | | | | | 05 | | 04 | |
| | 06 | | | | | | | |
| | | | | 08 | | 07 | | |
| | | | | 09 | | | | |
| | | 10 | | | | | | |
| | | | | 11 | | | | |
| | 12 | | | | | | | |
| 13 | | | | | | | 14 | 15 |



## இடமிருந்து வலமாக

01. துக்கத்தினால் என் கண்ணும், என் ஆத்துமாவும், என் வயிறுங்கூட கருகிப்போயிற்று என்றவர்
04. இப்பொழுதே என்னைக் கொன்று போடும் எனக் கர்த்தரிடம் வேண்டிக்கொண்டவன்
06. குளிர்காலத்துக்குத் தங்கும் வீட்டில் உட்கார்ந்திருந்த ராஜா
10. பெத்மாக்காவின் இன்னொரு பெயர்
12. இவன் தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான்

## வலமிருந்து இடமாக

02. கண்கள் பிடுங்கப்பட்டு, இரண்டு வெண்கல விலங்குகளால் கட்டப்பட்ட இருவரில் ஒருவர்
05. கர்த்தர் என் கால்களுக்கு வலை வீசினார் என்று சொன்னவன்
08. குற்றமில்லாத இரத்தத்தை மிகுதியாகச் சிந்தியவன்
09. தன் நீதியிலே கெட்டுப்போகிற நீதிமானுமுண்டு என்று சொன்னவன்
11. நான் மலைப்பாம்புகளுக்கு சகோதரன் என்று கூறியவன்
14. கை, கால்களின் பெருவிரல்கள் தறித்துப் போடப்பட்டவன்

## மேலிருந்து கீழாக

01. பாடைக்குப் பின் சென்ற ராஜா
03. இவள் யோவாசைக் களவாயெடுத்தாள்
05. பத்சேபாளின் அப்பா (குழம்பியுள்ளது)
07. இவன் 777 வருஷம் உயிரோடிருந்து மரித்தான்

## கீழிருந்து மேலாக

12. இவனின் காணிக்கைகளைக் குறித்து தேவனே சாட்சி கொடுத்தார்
13. வலுசர்ப்பத் துரவைக் கடந்து போனவன்
14. யெஸ்ரயேல் ஊரில் தாவீது விவாகம்பண்ணியிருந்த பெண்
15. குடல் வியாதி வந்து செத்துப் போன ராஜா




❒ வை. விமலதாஸ்

வைரங்களை விற்பனை செய்யும் வியாபாரி ஒருவர் இருந்தார். அவரிடத்தில் அனேகவிதமான வைரங்கள் இருந்தாலும் அவை எல்லாவற்றிலும் விசேஷமான வைரக்கல் ஒன்றை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்திருந்தார். அது மிகவும் பெறுமதி வாய்ந்ததும் சிறந்ததுமாய் இருந்தமையால் ஏனைய வைரங்களுடன் அதனை வைக்காமல் தன்னுடைய படுக்கை அறையில் வைத்து அதனைப் பாதுகாத்து வந்தார். ஒவ்வொரு நாளும் வேலை முடிந்து கடையை மூடிவிட்டு வரும் போது இந்த வைரக்கல்லைக் கொண்டு வந்து தன்னுடைய தலையணைக்கு அருகில் வைத்துவிடுவார். மறுநாள் காலையில் கடைக்கு செல்லும் போது தான் அதனை எடுத்துக் கொண்டு செல்வார். இவ்வாறு நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. ஒரு நாள் இரவு இவர் வழமை போன்று வந்து அந்த வைரக்கல்லை தலையணைக்கு அருகில் வைத்துவிட்டு நித்திரை செய்ய ஆரம்பித்தார். அப்போது திடீரென ஒரு சத்தம் கேட்டது, பதறியடித்துக் கொண்டு எழுந்து பார்த்தார். பார்த்ததும்... அதிர்ச்சியில் உறைந்து போனார். ஆம் இவர் பாதுகாத்து வைத்திருந்த அந்த வைரக்கல்லை எலி ஒன்று கடித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார். இவர் மிகவும் பயந்து அந்த எலியைக் கலைக்க முற்பட்ட போது அது அந்த வைரக்கல்லை விழுங்கிவிட்டது. விழுங்கினது மட்டுமல்ல அது இப்போது ஓடவும் ஆரம்பித்தது. எனவே இவரும் எப்படியாவது அந்த எலியைப் பிடித்துவிட வேண்டும் என்று துரத்த ஆரம்பித்தார். ஆனால் இவரால் அந்த எலியைப் பிடிக்க முடியவில்லை. அப்போது உடனடியாக தன்னுடைய நண்பருக்கு தொலைபேசி அழைப்பினை மேற்கொண்டு தன்னுடைய வைரத்தை எலி ஒன்று விழுங்கிய கதையை பரபரப்போடு கூறினார்.

எனவே நண்பர் சொன்னார்: கவலைப்படாதே, இந்த ஊரிலே எலிகளைப் பிடிப்பதில் கைதேர்ந்த ஒருவரை எனக்குத் தெரியும். அவரை அழைத்துக் கொண்டு உடனடியாக உன்னுடைய

வீட்டுக்கு வருகிறேன் என்று சொல்லி எலிபிடிப்பவரை அழைத்துக் கொண்டு அவசர அவசரமாக நண்பருடைய வீட்டுக்கு வந்தார். எலி பிடிப்பவர் வைர வியாபாரியின் படுக்கை அறைக்குச் சென்று நடைபெற்ற காரியங்களைக் கேட்டு எலி எங்கே பதுங்கியிருக்கும் என்று ஆராய்ந்து பார்க்க ஆரம்பித்தார். அப்போது அங்கே இருந்த அலுமாரி ஓரத்தில் காணப்பட்ட சிறிய துவாரத்துக்கு அருகில் அந்த எலி பதுங்கியிருப்பதைக் கண்டு கொண்டார். எனவே இந்த எலி இந்த துவாரத்துக்கு அருகில் எங்கோ தான் இருக்கிறது என்ற முடிவுக்கு வந்தார். எனவே அந்த எலி அந்த துவாரத்திற்குள் சென்று மறைந்து கொள்வதற்கு முன் எப்படியாவது எலியைப் பிடித்துவிட வேண்டும் என்று எலி பிடிக்கும் அந்த நபர் தன்னிடத்திலிருந்த எலியைச் சுடும் துப்பாக்கியை எடுத்து எலியைக் குறி வைத்தார். எல்லாமே சரியாக இருக்கிறது என்று அவர் ஒரே குறியாக அந்த எலியைச் சுட்டார். ஆனால் பரிதாபமாக அந்த குண்டு எலியில் படாமல் அங்கே காணப்பட்ட அந்த சிறிய துவாரத்தில் தான்பட்டது. அப்போது ஏற்பட்ட குண்டின் சத்தத்தினாலும் அதிர்வினாலும் அந்த துவாரத்திற்குள் ஒளிந்திருந்த பல நூறு எலிகள் வெளியே வர ஆரம்பித்தன. அவ்வளவு எலிகளும் அந்த துவாரத்திற்குள் தான் ஒளிந்திருந்திருக்கின்றன, இப்போது அவைகளெல்லாம் வெளியே வந்தன.

இவ்வளவு எலிகள் வெளியே வருவதைப் பார்த்த அந்த வைர வியாபாரி மிகவும் கவலைபட்டார். வைரத்தை விழுங்கிய எலி தனியாக நிற்கும் போது அதனைப் பிடிக்க முடியவில்லை. ஆனால் இப்போது பலநூறு எலிகள் வெளியே வந்துவிட்டது. இப்போது இவ்வளவு எலிகளுக்குள்ளும் வைரத்தை விழுங்கிய அந்த எலியை எப்படி இனங்கண்டு பிடிப்பது. என்னுடைய வைரத்தின் கதை முடிந்துவிட்டது, இனி ஒன்றுமே செய்ய முடியாது, என் விலையுயர்ந்த வைரம் என்னைவிட்டுப் போய்விட்டது என்று ஏமாற்றத்தோடு புலம்ப ஆரம்பித்தார். மாத்திரமல்ல எலியைப் பிடிக்க வந்திருக்கும் அந்த நபரிடமும் கோபப்பட ஆரம்பித்தார். நல்ல சந்தர்ப்பம் தனி எலியாக நின்ற போது அதனைப் பிடிக்காமல் விட்டுவிட்டீர்கள், இப்போது நூற்றுக் கணக்கான எலிகளுக்கு மத்தியில் எப்படி அந்த எலியை இனங்கண்டு பிடிப்பீர்கள், ஒவ்வொரு எலியையும் பிடித்து கொலை செய்து அதன் வயிற்றுக்குள் வைரம் இருக்கிறதா என்று பார்க்கப்போகிறீர்களா என்று இப்போது அவரைத் திட்டவும் ஆரம்பித்தார்.

அப்போது எலி பிடிக்க வந்திருக்கும் அந்த மனிதர் வைர வியாபாரியைப் பார்த்து, ஐயா கவலைப்படாதிருங்கள், நான் வைரத்தை விழுங்கியிருக்கும் எலியை இனங்கண்டு எப்படியும் உங்கள் வைரத்தை மீட்டுக் கொடுத்துவிடுவேன் என்று மிகப் பொறுமையாகக் கூறினார். இதனைக் கேட்ட வைர வியாபாரி இன்னும் அதிகமாய் திட்ட ஆரம்பித்தார். எப்படி உன்னால் இனங்காண முடியும்? இவ்வளவு எலிகளுக்கு நடுவில் வைரத்தை விழுங்கிய எலியை எப்படி இனங்கண்டு கொள்வாய்? அது முடியாத காரியம் என்று கூறினார். அப்போது எலி பிடிக்க வந்திருக்கும் அந்த நபர் ஐயா சற்று பொறுமையாக இருங்கள், நான் அந்த எலியை இனங்கண்டு பிடித்துவிடுகிறேன் என்று கூறி அந்த எலிகளை நன்றாக நோட்டம் விட ஆரம்பித்தார். அப்போது சிறிது நேரத்தின் பின் மறுபடியும் தன்னுடைய துப்பாக்கியை எடுத்து அங்கே இருந்த நூற்றுக் கணக்கான எலிகளுக்கு மத்தியில் ஒரு எலியை மாத்திரம் குறிபார்த்து சுட்டார். குண்டு பட்டதும் அந்த எலி செத்து விழுந்தது. அந்த எலியை எடுத்து அதன் வயிற்றைப் பார்த்த போது அந்த எலியின் வயிற்றுக்குள் தான் அந்த வைரம் காணப்பட்டது.

இதனைப் பார்த்த அந்த வைர வியாபாரி மிகவும் ஆச்சரியமடைந்தார். இவ்வளவு எலிகளுக்குள் எப்படி இந்த எலி தான் வைரத்தை விழுங்கிய எலி என்று சரியாக கண்டுபிடிக்க முடிந்தது என்று எலி பிடிக்கிறவரிடம் கேட்டார். அப்போது எலி பிடிக்கிற அந்த நபர் சொன்னார், ஐயா எலிகளிடத்தில் காணப்படுகிற மிக விசேஷமான குணாதிசயம், அவற்றுக்கு ஏதாவது பொருள் கிடைத்தால் அதனை தன்னிடத்தில் வைத்துக் கொள்ள வேண்டும், தான் தான் அதனைப் பாவிக்க வேண்டும் என்று நினைக்கும். எறும்புகளுக்கும் எலிகளுக்கும் இடையில் இது தான் மிகப்பெரிய வித்தியாசம். அதாவது எறும்புகளுக்கு ஏதாவது ஒன்று கிடைத்தால் உடனடியாக அதனை மற்றைய எறும்புகளுடன் பகிர்ந்து கொள்ளும். ஆனால் எலிகளோ அப்படி அல்ல. இந்த எலிக்கும் தெரியும், தான் விழுங்கியிருப்பது ஏதோ ஒரு வித்தியாசமான பொருள், மற்ற எலிகளைப் பார்க்கிலும் தான் வித்தியாசமாக ஏதோ ஒன்றை வைத்திருக்கிறேன் என்பதை உணர்ந்தமையினால் மற்றைய எலிகள் வெளியே வந்தவுடன் இந்த எலிக்கு ஏதோ ஒரு பயம் வந்துவிட்டது. ஐயோ! மற்ற எலிகள் வருகிறது, அவற்றுக்கும் நான் இந்த பொருளை பகிர்ந்து கொடுக்க வேண்டி ஏற்படுமோ அல்லது என்னிடத்திலிருந்து அந்தப் பொருளைப் பறித்துவிடுமோ என்ற பயத்தினால் இந்த எலி மற்றவைகளைவிட்டு தனியே வரும் என்று நான் நினைத்திருந்தேன். அவ்வாறு நான் நினைத்ததைப் போன்று இந்த எலி அவற்றுக்கு நடுவில் இருந்து வெளியே வந்து தனித்திருந்தது. எனவே அதனை இலகுவாக இனங்கண்டு சுட்டுப்பிடித்தேன், அந்த எலிக்குள் வைரம் இருந்தது என்றான்.

ஆம் நண்பர்களே அந்த எலி தன்னுடைய பொருளை மற்றவர்களிடத்தில் பகிர்ந்து கொள்ளக்கூடாது, தன்னிடத்தில் இருப்பதை மற்றவர்கள் எடுத்துவிடுவார்கள் என்று மற்றவர்களை குறித்த பயம் காரணமாக தன்னைத் தானே தனிமைப்படுத்தி இறுதியில் தன் வாழ்க்கையையே இழந்துவிட்டது. இன்றைக்கும் நாம் பார்க்கும் போது மற்றவர்களிடத்தில் அன்பு கூருவது, தன்னிடத்தில் இருப்பதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கின்ற, நன்மை செய்கின்ற காரியங்கள் குறைந்து கொண்டே வருகின்றது. சுயநலமும் நம்மைக் குறித்த காரியங்களும் தான் நமக்கு முக்கியமாகத் தோன்றுகிறது. நம்முடைய தேவைகளுக்கு ஏற்பவே மற்றவர்களை நாம் பார்க்கிறோம். ஆனால் ஆண்டவர் எம்மிடத்தில் அவ்வாறு அல்ல மற்றவர்களுக்காக நாம் செயற்பட வேண்டும், மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும், ஒத்தாசையாக வாழவேண்டும் என்று தான் எதிர்பார்க்கிறார். **1பேதுரு 4:10 ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள்.**

---

## சரியான விடை எழுதியவர்களில் பரிசுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:



**வினாவிடை - 87**

மோ.எப்சிபா

வடகாடு

**குறுக்கெழுத்துப் போட்டி - 85**

அ.அபிசாயினி

வேரவில்




## வேதப்பகுதி: நீதிமொழிகள் 11:23–31

பாபு பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தான். அவனுடைய இருக்கைக்குப் பக்கத்தில் ஒரு தாய் தன் கைக் குழந்தையுடன் இடமின்றி நின்று கொண்டிருந்தார். இப்பொழுது பாபு என்ன செய்யலாம்?



01. நான் பணம் கொடுத்து டிக்கெட் வாங்கியுள்ளேன். நான் இந்த இருக்கையை விட்டுக் கொடுக்கத் தேவையில்லை என்று சொல்லலாம்.

02. அந்தக் குழந்தையை வாங்கி நான் வைத்துக் கொள்கிறேன் என்று யோசிக்கலாம்.

03. நான் எழுந்து அந்த தாய்க்கு இடங்கொடுக்கிறேன். அது ஒரு உதவியாயிருக்கும் என்று முடிவு செய்யலாம்.

பாபுவின் இடத்தில் நீ இருந்தால் என்ன செய்வாய்? பாபு எழுந்து அந்த தாய்க்கு இடங்கொடுக்கலாம் என்று எண்ணியது தான் சரி. பிறருக்கு தேவையான ஒரு உதவியைச் செய்ய நாம் சிரமம் ஏற்கலாம். அது கர்த்தருக்குப் பிரியமானது. பிறருக்கு நன்மை செய்வதற்காக நாம் சிரமம் எடுத்தால் அதனால் நமக்கு மிகுந்து சந்தோஷம் வரும்.

**சிந்தனைக்கு:-** நாம் பிறருக்கு செய்கின்ற உதவியினால் தேவன் மகிமைப்படுகிறார். நன்மை செய்கிறவன் தேவனைக் கனப்படுத்துகிறான்.

நன்றி: "சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்! — நவம்பர் 10

# வினா விடை - ௮௮

*01.* அடிபட்ட ஜெபாலயத் தலைவன் யார்?

*02.* தேவ சமூகத்தில் செத்தவர்கள் யார்?

*03.* சகோதரராலே நற்சாட்சி பெற்ற ஒரு சீஷன் யார்?

*04.* தன் தம்பிக்கு காணிக்கை கொடுத்த அண்ணன்மார் யார்?

*05.* குரோதத்தை குவித்துக் கொள்ளுகிறவர்கள் யார்?

*06.* எல்லோராலும் நற்சாட்சி பெற்ற ஒரு மனுஷன் யார்?

*07.* தாவீதுக்கு எத்தனை மனைவிமார் இருந்தார்கள்?

*08.* ஜெபாலயத்துக்கு புறம்பே தள்ளப்பட்டவன் யார்?

*09.* சாத்தான் மின்னலைப் போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டது யார்?

*10.* கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினவனும், புறக்கணித்தவனுமாகிய ராஜா யார்?

## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!




"நான் ஒரு நீதிமான்: ஆனால் என் வீட்டில் மாபெரும் துக்கம். துக்கத்தால் என் இதயம் கிழிய நான் என் சால்வையைக் கிழித்தேன்: என் துக்கம் கேட்ட என் சிநேகிதரும் துக்கத்தால் அவரவர் தங்கள் சால்வையைக் கிழித்தனர்" நான் யார்? என் துக்கம் என்ன?

அனல் 2018 வைகாசி - ஆனி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:

**யோசேப்பு**

விடைகளை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



## வினாவிடை — 87
### சரியான பதில்கள்



01. சேம், யாப்பேத் - ஆதியாகமம் 9:23
02. இயேசு - மாற்கு 11:27
03. நெகேமியா - நெகேமியா 1:6
04. தாவீதின் மகன் - 11சாமுவேல் 12:15-18
05. தானியேல் - தானியேல் 9:11
06. இச்சை - யாக்கோபு 1:15
07. இஸ்ரவேலர் - எண்ணாகமம் 14:40
08. இயேசு - மத்தேயு 4:5
09. சவுல் - 1சாமுவேல் 15:24
10. இயேசு கிறிஸ்து - யோவான் 10:23

## சரியான விடை எழுதியவர்கள்
### குறுக்கெழுத்துப் போட்டி - 85, வினா விடை - 87

**காரைநகர்**
01. நா.அன்னாள்
02. நா.கிறிஸ்தீனா
03. நா.கிறிஸ்ரீன்
04. நா.கிருஷன்
05. ம.டயானி
06. பா.கோமதி
07. பா.தர்சினி
08. கிதியோன்
09. பா.டிலானி
10. ம.மதுஷன்
11. லோ.வதனி
12. வி.அனுராதா
13. பா.அனுகரன்
14. பா.அனுசியா

**பொன்னகர்**
15. நா.நந்தினி

**வேரவில்**
16. அ.அபிசாயினி

**நாவற்குழி**
17. அ.மேரி

**பாண்டவெட்டை**
18. ம.நிம்சிகா
19. ம.சிவகௌரி


**தர்மபுரம்**
20. உ.கயல்விழி
21. ஜா.சிலோசனா

**வடகாடு**
22. மோ.எப்சிபா

**யாழ்ப்பாணம்**
23. பெ.ஜெசிதரன் *


**கனடா**
24. குகன் +

**மானிப்பாய்**
25. எம்.ஜெயந்தி
26. எஸ்.சிந்துஜா




* வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
\+ குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்

## படித்ததில் பிடித்தது




பலரும் இந்த உலகத்தை மாற்ற நினைக்கிறார்களே தவிர

தன்னை மாற்றிக் கொள்ள விரும்புவதில்லை.




தேவன் தகுதியுள்ளவனை அழைப்பதில்லை

அழைத்தவனைத் தகுதியுள்ளவனாக்குகிறார்.



சிலுவையை நீ அணிந்து கொள்ளும் போது உலகம் உன்னைக் கிறிஸ்தவனாகப் பார்க்கும்; ஆனால் சிலுவையை நீ சுமக்கும் போது தேவன் உன்னைத் தன் சீஷனாகப் பார்க்கிறார்.



தன்னை நல்லவராகக் காட்டிக் கொள்ள அடுத்தவரை கெட்டவராகச் சித்தரிக்கும் எவரும் நீண்ட நாள் நல்லவர் வேடத்தில் சுற்ற முடியாது.



இல்லாதவருக்குக் கொடுக்கிறேன் என்றால், என்னிடம் நிறைய இருப்பதாகப் பொருளல்ல; ஒன்றுமில்லாத நிலையின் வலியை அனுபவித்திருப்பதினால் தான்.

# சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

## Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 220.00 |
| இந்தியா (India) | 390.00 |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | 840.00 |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | 420.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 510.00 |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 720.00 |

(காசோலை. காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / ZION CHURCH என எழுதப்பட வேண்டும்)

சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.

## சந்தா மாதிரிக் கூப்பன்


பெயர்:..........................................................................

முகவரி:.......................................................................

...................................................................................

...................................................................................

ஒவ்வொரு மாதமும் இறுதி வெள்ளிக்கிழமைகளில் மாலை 4:30 மணிக்கு



வியாதிப்பட்டவர்கள்

தேவையுள்ளவர்கள்

பிசாசின் பிடியில் உள்ளவர்கள்

# சீயோன் தேவாலயம்

24, இராமையாச்செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணத்தில்

**அமைந்துள்ள எமது பிரதான ஆலயத்தில்**

போன்றவர்களுக்கு விசேஷித்த விண்ணப்ப ஜெபம் ஏறெடுக்கப்படுகின்றது. இதில் கலந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

To:

*Zion Church Office,*
*No. 347, Navatar Road,*
*Jaffna, Srilanka.*

அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351